Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2862)

முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 13 திங்கட்கிழமை (29.07.2013) பக்கங்கள் 20 | ஓசை – 302



உரிமை மடல் 02


கடினம் 08



சுப்பர் மான் 11

அவசியமானது


13


சிகிச்சை 18


# 23 வருடம் படையினர் வசமிருந்த புதிய கடற்கரை வீதி திறப்பு





(யாழ்ப்பாணம்)
கடந்த 23 வருடங்களாக படையினர் வசமிருந்த யாழ்ப்பாணம் - குருநகர் வடக்கு புதிய கடற்கரை வீதி நேற்றைய தினம் மக்கள் பாவனைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்

(19) ஆம் பக்கம் பார்க்க

# வடமாகாண சபைத்தேர்தலில் முன்னாள் புலிகள் இல்லை

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)
வடமாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் விடுதலைப்புலி முன்னாள் உறுப்பினர்கள் எவரும் இடம்பெறவில்லையென அக்கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவிக்கையில்,

வெற்றி பெறுவதற்குத் தகுதியானவர்களுக்கு மட்டுமே தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கக் கட்சியில் போட்டியிடுவாரென எதிர்பார்க்கப்பட்ட விடுதலைப்புலிகளின் முன்னாள் ஊடகப்பேச்சாளர் தயா மாஸ்டருக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் கிடைக்காத காரணத்தால் அவர் சுயேட்சையாவும் போட்டியிட மாட்டாரென பி.பி.சி.யிடம் தெரிவித்துள்ளார்.

# பல்வேறு இழுபறிக்குப் பின்னர் கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவு

## வவுனியாவில் தொடருகிறது இழுபறி

(யாழ்ப்பாணம்)
பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் வடமாகாண சபைத்தேர்தலுக்கான வேட்பாளர்கள் தெரிவு நிறைவடைந்துள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வட்டாரங்கள் தெரிவித்தன.

வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான இறுதிக்கட்ட பணிகள் நேற்றையதினம் மார்ட்டின் வீதியில் உள்ள தமிழரசுக் கட்சியின் யாழ்.கிளை அலுவலகத்தில் கூட்டமைப்பின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,

இன்று (நேற்று) வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான இறுதிக்கட்ட பணிகள் நிறைவடைந்துள்ளன. வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டத்தினதும் வேட்பாளர்கள் தெரிவாகியுள்ளார்கள். வேட்பு மனுக்களில் கையொப்பம் இடப்பட்டுள்ளது. இன்று 12 மணிக்கு இந்த 5 மாவட்டங்களிலுமுள்ள மாவட்ட



செயலகங்களிலும் வேட்பு மனுத்தாக்கல் செய் யப்படும்.

யாழ்ப்பாணத்தில் முதலமைச்சர் வேட்பாளராக பரிந்துரைக்கப்பட்ட சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும். இதே

(19) ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை மக்களுக்கு சம உரிமை வேண்டும்

## வலியுறுத்தும் பாரதிய ஜனதா

(நியுயோர்க்)
இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை வழங்கப்படுவதுடன், எந்தப் பிரிவினரும் வஞ்சிக்கப்படக்கூடாது என பாரதிய ஜனதாக் கட்சி தெரிவித்துள்ளது.

அமெரிக்கா சென்றுள்ள பாரதிய ஜனதா கட்சியின் பொதுச் செயலாளரும், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற வெளிவுறவுத்துறை நிலைக்குழுத் தலைவருமான அனந்தகுமார் நியுயோர்க்கில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். எல்லா குடிமக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். எந்தப்பிரிவினரும் வஞ்சிக்கப்படக் கூடாது.

நமது உணர்வுகளை இராஜாங்க ரீதியாக இலங்கை

(19) ஆம் பக்கம் பார்க்க

# வேட்பாளர் பட்டியலில் பெயர் இல்லை செயலகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)
வடமாகாண சபைத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பாக போட்டியிடுவதற்காக விண்ணப்பித்தபோதிலும் வெளிவந்த வேட்பாளர் பட்டியலில் பெயர் இடம்பெறாததைக் கண்டித்து யாழ்.செயலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுதந் திரக்கட்சி சார்பாக போட்டியிடுவதற்கு விண்ணப்பித்த எம்.எம்.சிராஸிற்கு ஆதரவானவர்களே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் பெருமளவான முஸ்லிம் இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டதுடன் புத்தூர், சிறுப்பிட்டி, சுன்னாகம் போன்ற பகுதி களில் இருந்து மக்கள் பேருந்துகள் மூலம் ஏற்றி வரப்பட்டு இந்த மறியல் போராட்டத்தில் பங்குபற்றினர்.

இதில் கலந்துகொண்டவர்கள் "ஏழைகளின் வயிற்றில் அடிக் காதே" "வேண்டும் வேண்டும் எங்கள் அண்ணன் வேண்டும்" "பனை

(19) ஆம் பக்கம் பார்க்க

# வவுனியா வேட்பாளர் தெரிவில் முட்டிமோதும் தமிழரசுக் கட்சி

நடைபெறவுள்ள மாகாண சபைக்கான வேட்பு மனுக்களை இன்று தமிழத் தேசியக் கூட்டமைப்பு தாக்கல் செய்ய தீர்மானித்துள்ள நிலையில் அதற்காக வவுனியா மாவட்ட வேட்பாளர் தெரிவில் பதவிக்காக கட்சிக்குள் குத்து வெட்டு இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பாக போட்டியிடுவதற்கு இரு வேட்பாளர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த நிலையில் அதற்காக வைத்திய கலாநிதி சத்தியலிங்கம் ஒரு வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். முந்தைய வேட்பாளரை தெரிவு செய்வதற்காக தேவராஜா,

(19) ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை தமிழரசுக் கட்சியில் 3 பெண்கள் உட்பட 51 பேர் போட்டி

(யாழ்ப்பாணம்)
வடமாகாண சபைத்தேர்தலில் தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்தில் எழிலனின் மனைவி உட்பட 51 பேர் போட்டியிடுகின்றனர். இவர்களில 48 ஆண்களும் 3 பெண்களும் அடங்குகின்றனர்.

யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி எழிலனின் மனைவி ஆனந்தியும், கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கிராஞ்சி அ.த.க. பாடசாலை ஆசிரியை திருமதி வினுபானந்தகுமாரி கேதுரட்ணமும், முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தி முல்லை மந்துவில் அரசரட்ணம் மகா வித்தியாலய ஆசிரியை மேரிகமலா குணரட்ணம் ஆகிய பெண்கள் போட்டியிடுகின்றனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# உரிமை மடல் ஊடாக—
# மனம் திறக்கிறார் அமைச்சர் டக்ளஸ்

*எம்மினிய தமிழ் பேசும் மக்களே!*
*பாசமிக்க எம் தோழர்களே!*
*புலம்பெயர்ந்து வாழும் எம் தாயக தேசத்து உறவுகளே!*

உங்களுக்கு வணக்கம்!

உரிமை மடல் ஊடாக, மறுபடியும் நான் உங்களோடு மனந்திறந்து பேச விரும்புகிறேன்.

நாம் கொண்டிருக்கும் கருத்துக்களையும், கொள்கைகளையும் நான் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

நடைமுறை யதார்த்த வழிமுறையில் நாம் முன்னெடுத்துவரும் எமது புனித இலட்சியப் பயணத்தின் திட்டங்களையும், தீர்மானங்களையும் பற்றி தொடர்ந்தும் உங்களுடன் கலந்துரையாட விரும்புகின்றேன்.

கருத்து என்பது மக்களைப் பற்றிக்கொண்டால், அது மாபெரும் சக்தியாக உருவெடுக்கும்!

அதன் ஊடாகவே இங்கு மாற்றங்கள் நிகழும் என நான் திடமாக நம்புகின்றேன்.

நாம் விரும்பும் மாற்றம் என்பது, தமிழ் பேசும் மக்கள் எமது மண்ணில் அரசியல் சமவுரிமை பெற்ற சுதந்திர பிரஜைகளாகவும், அழிந்து போன தேசத்தில் இருந்து நிமிர்ந்தெழுந்து, வாழ்வியல் உரிமைகளைப் பெற்றவர்களாகவும்,...

இல்லாமை என்பது இல்லாதொழிக்கப்பட்டு, வறுமையற்ற இனிய வாழ்வை அனுபவிப்பவர்களாகவும் வாழக்கூடிய காலச்சூழலை எமது மக்களின் வரலாற்று வாழ்விடங்கள் தோறும் உருவாக்கிக் கொடுப்பதே ஆகும்.

ஆனாலும், எமது இலட்சியக் கனவுகளை நிறைவேற்ற, நாம் கொண்டிருக்கும் திட்டங்களும், தீர்மானங்களும் எமது மக்களை சென்றடைய முடியாதபடி திட்டமிட்டுத் தடுக்கப்படுகின்றன.

ஆயிரம் கைகள் மறைத்திருந்தாலும்,.. ஆதவன் மறைவதில்லை.

கரு முகில்கள் சூழ்ந்து வரினும் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் எங்கள் சூரியக்குஞ்சுகளின் சுதந்திர எண்ணங்களை எவராலும் தடுத்து நிறுத்தி விட முடியாது.

எமது உண்மை முகங்களையும், எமது மக்களுக்கான அர்ப்பணம் மிக்க எமது உழைப்பையும் திட்டமிட்டு மறைத்துவிட தீய சக்திகள் செயலாற்றி வருகின்றன.

நாம் சொல்லும் கருத்துக்கள் திரிபுபடுத்தப்பட்டு பரப்புரை செய்யப்படுகின்றன. எம் மீதான பொய்யான வதந்திகளும், கட்டுக்கதைகளும் திட்டமிட்டு பரப்பப்படுகின்றன.

எம்மை பழிவாங்கும் முகமாக என்னுடன் இருந்தவர்களை அச்சுறுத்தியும், கொலை செய்தும், விரட்டியடித்தும் பல்வேறு வித செயற்பாடுகளை மேற்கொண்டதுடன் என்மீதான படுகொலை முயற்சிகளும் பல்வேறு தடவைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. தொடர்ந்தும் திட்டமிட்டே அபாண்டமான முறையில் எம் மீது சேறு வாரி தூற்றப்படும் நிகழ்வுகளும் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன.

இவைகளைக் கண்டு நர்ம் சோர்ந்து விடப்போவதில்லை. மாறாக, இத்தடைகளைக் கண்டு இன்னமும் அதிகமாகவே எழுச்சி அடைகின்றோம்.

இத்தனை தடைகளைக் கடந்தும் எமது மக்கள் எமது அரசியல் வழிமுறை மீது நம்பிக்கை கொண்டு, எமது பக்கம் தொடர்ந்தும் அணி திரண்டு வருவது கண்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

மலை தடை கடந்து, புயலிடை எழுந்து, நடந்து வரும் எமது உறுதி கண்டு சிலர் காழ்ப்புணர்ச்சி அடைகின்றனர்.

எமது மக்களுக்கான அரசியலுரிமை பிரச்சினை குறித்து நாம் தீர்க்கதரிசனமாக ஆரம்பத்தில் இருந்தே எங்கிருந்து தொடங்க வேண்டும் எனச் சொல்லி வந்தோமோ அதுவே இங்கு நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கின்றது.

இதன் காரணமாகவே, எமது மக்கள் எமது திசை வழி நோக்கி பயணிக்க ஆரம்பித்துள்ளனர்.

இதைக் கண்டு சகிக்க முடியாதவர்களே எமது மக்களின் இலட்சியக் கனவுகளுக்கு எதிராகவும், எமது நடைமுறைச் சாத்தியமான வழிமுறைக்கு எதிராகவும் பொய்யான பரப்புரைகளைப் பரப்பி வருகின்றனர்.

தமது சுயலாப அரசியல் நாடகங்கள் இனியும் எமது மக்களின் மனங்களில் அரங்கேற முடியாமல் போய் விடுமோ என்று அவர்கள் அச்சப்படுகின்றார்கள்.

ஆகவேதான், தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக எம் மீதான அவதூறுகளை சுமத்தி, திட்டமிட்டு செயலாற்றி வருகின்றார்கள்.

**பாசமிக்க எம் தமிழ் பேசும் மக்களே!.....**

வரலாற்று நதியின் ஓட்டத்தை தடுத்து நிறுத்தியவர்கள் யாருமில்லை. அது தன் தேவைக்கேற்ற வகையில் வளைந்து, நெளிந்து, தான் செல்ல வேண்டிய திசை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும்.

வளைந்து, நெளியாத எவையும் தடுக்கப்படும் என்பதே உண்மையாகும். அல்லது முறிக்கப்படும் என்பதே யதார்த்தமாகும்.

இந்தத் தத்துவத்தின் உண்மைகளே உலகெங்கும் நடந்து முடிந்திருக்கின்றன.


எது எங்கு நடந்தாலும் தமிழ் பேசும் மக்கள் தோற்றுப்போன ஓர் இன, சமூகம் அல்ல. தவறான வழிமுறைகளே இங்கு தோற்றுப்போயிருக்கின்றன.

இதுவரை கால அனுபவங்கள் யாவும் எமது இலட்சிய கனவுகளை அடைவதற்கான சிறந்த படிப்பினைகளை எமது மக்களுக்கு கற்றுத்தந்திருக்கின்றன.

அனுபவங்களின் கருப்பையில் இருந்துதான் புதிய புதிய வரலாறுகள் பிறப்பெடுக்கின்றன.

மக்களின் கருத்துக்களையும், விருப்பங்களையும் சரிவரப் புரிந்து கொள்ளாத எந்தவொரு முயற்சியும் வெற்றிகளை தரப் போவதில்லை.

அதேபோல். நடைமுறைக்கு சாததியமான சரியான வழிமுறையின் பக்கம் மக்கள் முழுமையாக அணிதிரளாதவரை கிடைக்கப்போவதுமில்லை.



எமது மக்களின் முழுமையான பங்களிப்போடு நாம் செல்ல வேண்டிய அரசியல் இலக்கின் திசைநோக்கி செனறடைவோம் என்பது உறுதி.

நீராகக் கரைந்து போவதற்கு நாம் ஆற்றில் விழுந்த உப்புக்கல் அல்ல. மாறாக நாங்கள் காற்றிலும், கடும்புயலிலும் எதிர் நின்று, சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளை எதிர் கொண்டு, மக்களுடன் மக்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

உப்புக் கடல் நீரை பாற்கடலாக மாற்றுவோம் என்று கற்பனையில் இருந்து கொண்டு கதை விடுவார்கள்.

அதை யாரும் இனி நம்பிவிடப் போவதில்லை

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவர்கள் வானம் ஏறி வைகுண்டம் போவோம் என்றும் வாய் வீரம் பேசுவார்கள்.

அதையும் யாரும் இனி ஏற்கப்போவதில்லை

எவர் எதைச் சொன்னாலும் எமது நடைமுறை யதார்த்த வழிமுறையே இங்கு வெற்றி கண்டு வருகின்றது.

எவராலும் எமது இலட்சியப் பயணத்தை தடுத்து நிறுத்தி விட முடியாது. நாம் அடைய வேண்டிய இலக்கை எமது யதார்த்த வழிமுறையில் அடைந்தே தீருவோம். அதற்காக நாம் இன்னமும் உறுதி கொண்டு உழைப்போம்.

**மறுபடியும் இன்னுமொரு உரிமை மடலில் சந்திப்போம்**

என்றும் நாம் மக்களுக்காக.
தேசத்திற்காக தியாகங்களை ஏற்போம்.
மத்தியில் கூட்டாட்சி!
மாநிலத்தில் சுயாட்சி
நாம் செல்லும்
பயணம் வெல்லும்!
இது உறுதி....
பிரியமுடன் உங்கள்
டக்ளஸ் தேவானந்தா
செயலாளர் நாயகம்
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி. (தொடரும்...)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2447 திகதி 27.07.2013

ஆங்கில எழுத்து: W

வெற்றி எண்கள் 26 33 36 66 போனஸ் இல: 11

ஜக்பொட் பரிசு ரூ.18,037,775/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 239773 | 20/- | 4,795,460/- |
| 2 இல | 17216 | 100/- | 1,721,600/- |
| 3 இல | 346 | 1,000/- | 346,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9907 | 40/- | 396,280/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 703 | 1,000/- | 703,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 18,037,775/- | - |
| 1 இல + போனஸ் இல | 11396 | 100/- | 1,139,600/- |
| 2 இல + போனஸ் இல | 537 | 500/- | 268,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 477 | 200/- | 95,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 32 | 1,500/- | 48,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 280407 | | 12,143,840/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2013 ஜூலை 31 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ.18,692,900/-

அபிவிருத்தி லொத்தர் சபை

[illegible] கொழும்பு - 02

(C/2963)


## சிறிய வீதிகள், குளங்கள் அபிவிருத்தி அடுத்த மாதம் பணிகள் ஆரம்பம்

(பருத்தித்துறை)

வடமாகாணத்தில் சுமார் 150 சிறிய குளங்கள், சிறியவீதிகள் 700 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யும் பணிகள் அடுத்தமாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பொருளாதாரஅபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வடமாகாண சபை ஊடாக இந்த அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

வடக்கில் மீள் குடியேற்றம் நடைபெற்ற பிரதேசங்களில் வாழும் மக்களின் நலன் கருதி அப்பிரதேசங்களில் அண்டியுள்ள சிறு குளங்கள் மற்றும் வீதிகளை அபிவிருத்தி செய்யுமாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அபிவிருத்தி செய்யப்படும் சிறு குளங்கள் மற்றும் வீதிகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய 5 மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டங்கள் 3 மாத காலத்திற்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (109)

## மின்ஒளி இன்றிச் சென்ற சைக்கிள்கள் தடுப்பு

(யாழ்ப்பாணம்)

இரவு வேளைகளில் மின் ஒளிஏற்படுத்தாது சென்ற சைக்கிள்களை யாழ். போக்குவரத்து பொலிஸார் தடுத்து வைதத்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு யாழ். நகரப் பகுதிகளில் மின் ஒளி இல்லாது சென்ற சைக்கிள்கள் 18 யாழ். பொலிஸாரினால் நகரின் பல்வேறு பகுதிகளில் வைத்து பறிமுதல் செய்யப்பட்டது.

இச்சைக்கிள்களில் மின்ஒளிச்சாதனங்கள் எதுவும் பொருத்தப்படவில்லை அத்துடன் சைக்கிள்களில் வந்தவர்களும் எந்தவிதமான ஒளிச்சமிக்ஞையும் அற்ற நிலையில் வந்தமையால் இவை பறிமுதல் செய்யப்பட்டதாக யாழ். போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இவை அனைத்தையும் நாளை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (இ,25)








பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றபோது விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படுவதையும் பிரதம விருந்தினரான பாடசாலையின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளைத் தலைவி திருமதி. சாந்தகௌரி கனகசபை, செல்வி.கே.மாதுளாவிற்குப் பதக்கம் அணிவிப்பதையும் ஆசிரிய சேவையில் வெள்ளி விழாக்கண்டு இளைப்பாறும் ஆசிரியை திருமதி இந்திராணி ஸ்ரீரங்கனுக்கு வடமாகாணக் கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் விருது வழங்கி கௌரவிப்பதைக் காணலாம். (01)

# பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களூடாக பனைசார் உற்பத்தி பாரிய வளர்ச்சி

## யாழ்.மாவட்ட செயலகப் புள்ளி விபரத் தகவல்



(யாழ்ப்பாணம்)

பனம் பொருள் உற்பத்திகளை அதிகரிக்கும் பொருட்டு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களினூடாக பனை சார்ந்த உற்பத்திகளில் பாரிய அபிவிருத்தி ஏற்பாட்டுள்ளதாக மாவட்ட செயலகம் விடுத்துள்ள புள்ளிவிபரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்திக்கு வழி செய்யும் வகையில் கைதடி, பனை ஆராய்ச்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையமானது பகுப்பாய்வுக் கூடம், உணவு மற்றும் தொழில்நுட்ப ஆய்வு கூடம் நுண் உயிரியல் ஆய்வு கூடம் என்ற மூன்று பெரும் பிரிவுளாக செயற்படுகின்றன.

இதற்கமைய பனம் விதை நடுகைத் திட்டத்தின் மூலம் பனை மரநடுகை அபிவிருத்தி செய்தலும் மீள்நடுதலும் கூடுதல் பயன்பாடு அளித்துள்ளதுடன் 375 பயனாளிகளுக்கு பனம் கைவினைப் பொருட் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2500 கிலோகிராம் பனங்கட்டி உற்பத்தியும் அதிகரித்திருப்பதுடன் கருப்பணி உற்பத்தியும் 1800 லீற்றராக அதிகரித்துள்ளது.

இத்துடன் பனை வெல்ல உற்பத்தியும் இந்த ஆண்டில் 300 கிலோகிராமாக உள்ளது. மென்பான உற்பத்தியும் 20,000 லீற்றராகவும், புளுக்கொடியல் உற்பத்தி 4000 கிலோ வாகவும், பனாட்டு உற்பத்தி 3000 கிலோவாகவும் அதிகரித்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான அதிகரிப்பு பாரம்பரிய கைத்தொழில் மற்றும சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் பெருமுயற்சியால் ஏற்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (இ)

# வல்லிபுரக் கோவில் வீதி புனரமைப்பு எப்போது



பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் இருந்த வல்லிபுரக்கோவில் வீதியானது திருத்தம் செய்வதற்கு ஆரம்பகட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ் வீதியானது வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்குச் செல்வதற்கு மிகவும் முக்கியமானது. அதனை விட குடத்தனை நாகர்கோவில் அம்பன் முதலான பகுதிக்கு செல்லும் மக்களும் இவ் வீதியை பயன்படுத்துகின்றனர்.

பல வருடங்களாக திருத்தாமல குண்டும் குழியுமாக இந்த வீதி காணப்படுவதனால் கோயிலுக்கு செல்லும் வாகனங்கள் இந்த வீதிக்கு அருகாமையில் உள்ள வயல் காணிகளிற்கு ஊடாக பாதை அமைத்து பயணம் மேற்கொள்வதுடன் அதுவும் மழைகாலங்களில் பயணம் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பம் ஆக இருக்கும் வல்லிபுர ஆழ்வார் திருவிழாவிற்கு முன்னராக இவ்வீதியினை உரிய அதிகாரிகள் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீதியினை உரிய முறைப்படி திருத்தினால் தென்மராட்சி, வடமராட்சி பகுதி மக்கள் பெரிதும் நன்மையடை வார்கள்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து திருவிழாவிற்கு முன்னர் வீதியினை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

# பத்தமேனி பௌத்தபாடசாலையை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

அச்சுவேலி பத்தமேனி விபசி பௌத்த பாடசாலையா னது கடந்த காலங்களில் இயங்கி வந்ததுடன் பல மாணவர்கள் இங்கு தமது ஆரம்பக் கல்வியைக் கற்று வந்தனர்.


எனினும் 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் வன்முறைகளின் பின்னர் இப் பாடசாலையானது தற்போது இயங்காத நிலையில் உள்ளதுடன் சுற்று வேலிகள் எவையும் இல்லாது திறந்த வெளி அரங்காக காட்சியழிப்பதுடன் அதன் கூரைப்பகுதிகளும் மற்றும் கட்டடப்பகுதிகளும் சேதமடைந்து காணப்படுகின்றன.

அத்தடன் பாடசாலையைச் சுற்றி கழிவுப் பொருட்களும் மற்றும் விலங்குகளின் கழிவுகளும் கட்டாக்காலி நாய்கள் மற்றும் கால்நடைகளின் தங்குமிடமாகவும் சுற்றுப் புறங்கள் யாவும் சுகாதாரமற்ற முறையில் காணப்படுகின்றது.

எனவே பாடசாலைப் பகுதிகளில் இவ்வாறான சுகாதாரமற்ற செயற்பாடுகள் மேற்கொள்வது கண்டிக்கத்தக்க விடயம் எனச் சமூக ஆர்வலர்களும் ஊர்ப்பெரியோர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்தக் கிராம மாணவர்கள் தமது ஆரம்பக் கல்வியை தூர இடங்களில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று கற்று வருகின்றனர். எனவே இந்தப் பாடசாலையினை மீளப் புனரமைத்து இயங்கச் செய்ய உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராமவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மீள இப் பாடசாலை இயங்கினால் அண்மையில் உள்ள இந்தப் பாடசாலையில் தமது பிள்ளைகளை சேர்ப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர். (85)




# கை நழுவிப் போகும் வாய்ப்புகள்

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் 400 மீற்றர் விளையாட்டு மைதானம் இல்லாமை பெரும் குறைப்பாடகக் காணப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள மாணவர்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களின் வீரர்கள் விளையாட்டுத்துறை சார் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு பெரிய மைதானம் தேவையாகவுள்ள நிலையில் இந்தப் பிரதேசத்தில் மைதானம் இல்லாமையால் இவர்கள் பயிற்சியை பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

நான் பாடசாலைக் காலத்தில் படிக்கும் போது விளையாட்டுத்துறையில் அதிக கவனம் செலுத்தினேன். அக் காலப்பகுதியிலும்

சரி தற்பொழுதும் எமது ஊரகாவற்றுறை பிரதேச மாணவர்கள் நான் படித்த புனித அந்தோனியார் கல்லூரியிலுள்ள 200 மீற்றர் மைதானத்திலேயே பயிற்சி பெற்று மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் எமது பிரதேசம் உட்பட தீவக பிரதேசத்தில் மெய்வல்லுநர் போட்டிகளில் மாணவர்கள் 1,2,3, ஆம் இடங்களைப் பெறுவது குறைவாக உள்ளது. எமது தீவக வலயமே ஒவ்வொரு முறையும யாழ்.மாவட்டத்தில் மெய்வல்லுநர் போட்டியில் 5 ஆம் இடத்தினைப் பெற்றுக் கொள்கிறது.

இதற்கு எமது பிரதேசத்திலும் வேலணை நெடுந்தீவு பிரதேசங்களிலும் 400 மீற்றர் விளையாட்டு மைதானம் இல்லாமையே பிரதான காரணமாகும். தீவக பிரதேச மாணவர்களுக்கு விளையாட்டுக்களில் திறமை இருந்தும் போதிய பயிற்சிகள் இன்மையாலேயே அவர்கள் பின்தள்ளப்படு கின்றனர்.

எனவே தீவக பிரதேசத்தில் 400 மீற்றர் மைதானம் அமைக்க துறைசார்ந்த உயர் அதிகாரிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் தீவக மாணவர்களின் விளையாட்டுச் சாதனை தேசிய மட்டத்திற்கும் செல்லும் என்பதில் ஐயமில்லை.

***

கே.புவி
இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்
ஊர்காவற்றுறை

# தகவல் தொடர்பாடலில் விஞ்ஞானமானிக் கற்கை

## கோரப்படுகிறது விண்ணப்பம்

(யாழ்நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்திற்கும், இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழகத்துக்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞானமா னி பட்டப்படிப்பு கற்கை நெறிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாதிரி விண்ணப்பப்படிவங்களை இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் இணையத்தளமான www.rjt.gc.lk என்பதிலிருந்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக இணையத்தளமான www.jfn.gc.lk என்பதிலிருந்தோ தரவிறக்கலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 12.ஆம் திகதிக்கு முன்னதாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பரீட்சை மற்றும் கல்விப் பகுதி இலங்கை ராஜரட்டை பல்கலைக்கழகப் பகுதி. இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டுமென மேற்படி பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (10)

# விற்பனை நிலையம் திறப்பு

(சாவகச்சேரி)

கால்நடை வளர்ப்போர் சங்கத்தினரால் பாற்பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்று சாவகச்சேரியில் திறக்கப்பட்டுள்ளது.

நகரிற்கு வரும் மக்களின் நன்மை கருதி இந்த விற்பனை நிலையம் சாவகச்சேரி பஸ்தரிப்பு நிலையப் பகுதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட பிரதிநிதியினால் இக் கடை திறந்து வைக்கப்பட்டுள்ளதாக எனக் கால்நடை வளர்ப்போர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இதன் மூலம் பல்வேறு விதமான பாற்பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும் என வும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

கடுமையாக முயற்சி செய், வெற்றி உன்னைத் தேடிவரும் நாள் வெகு தொலைவில் இல்லை. - வெஸ்மல்.


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net


## நச்சுச் சுழலிலிருந்து மீள்வோம்!

நம்மிடம் எந்தத் தவறுகளும் இருந்ததில்லை, எல்லாத் தவறுகளும் மற்றவர்களினுடையதே என்ற வாய்பாட்டை நாமே சொல்லி நாமே நம்பி, இதோ சர்வதேசமும் ஏற்றுக்கொண்டுவிடப் போகிறது என்ற பாமரத்தன எண்ணத்திலேயே இப்போதும் இருக்கிறோம்.

நம்மைச் சுயவிமர்சனம் செய்துகொண்டு, நம்மைத் திருத்திக்கொண்டு, நம் தேவையிலுள்ள நியாயத்தைச் சொல்லும்போதுதான் மற்றவர்களுக்கும் அது நியாயமாக விளங்கும் என்ற எளிய உண்மையை நாமின்னும் புரிந்துகொள்வதாயில்லை.

எதிர்த்தரப்பின் குற்றமே பெரிதென்று பார்க்கப்படுவதால், நாம் குற்றமற்றவர்கள் என்று ஆகிவிட முடியாது. இந்த நாட்டில் பேரினவாதக் கருத்தியல் உருவாக்கிய அழிவுகளுக்குச் சமாந்தரமாக தமிழ்த் தேசியத்தின் பொங்குதலும் பெரும் உயிரழிவுகளை நோக்கிப் பாய்ந்ததை நாம் எப்படி மறுக்க முடியும்?

நம்மைத் தனிப்பெருமை கொண்டவர்களாகவும், மற்றவை யாவற்றையும் எதிரிகளாகவும், நமது நலனுக்கு குந்தகமாக இருப்பார்கள் என்று கருதும் அனைவரையும் கொன்றுகுவிப்பதே நம் மக்களைக் காப்பாற்றுவதற்கான தியாகப் பண்பாகவும், மற்றவர்களுடன் சேர்ந்து வாழ்வது பற்றிய எண்ணமே தோன்ற விடாமல் மறுப்பதும், எதிரிகளை உருவாக்கிப் பெருப்பித்தபடி இருப்பதும் தேசபக்தி என்ற பெயரில் உருவாகக்கூடிய பாசிசம் என்பதை இன்று நாமறிவோம்.

நம்மை மேன்மையானவர்களாகவும், எல்லோரையும் விட அதிக துயரங்களைச் சுமப்பவர்களாகவும் கற்பித்துக் கொள்ளும் தேசியமும் தேசபக்தியும் நம் ஆசைகளின் பூர்த்திக்காக மற்றவர்களுக்கு ஊறு செய்வதை நியாயப்படுத்துகிறது. மொழி, இனம், மதம், கலாசாரம் என்று எத்தனை எத்தனை விதங்களில் வேறுபட்டிருந்தாலும் பகுத்தறிவு மனிதர்களாக நாம் இணைந்து வாழ முடியும் என்ற சாத்தியத்தை மறுத்து நம்மைக் குரூரமானவர்களாக்கி விடுகிறது.

நம்முடைய தேச நலனுக்காக, நமது மக்களின் நல்வாழ்வுக்காக என நாம் செய்த கொலைகளும், உயிர்களைப் பறிகொடுத்த குடும்பங்களின் அடிவயிற்றுக் கதறல்களும் நம் மனசாட்சியைத் தொட்டு உறுத்திவிடாதிருக்க தேசிய மற்றும் விடுதலைப் போர்வையை அதன்மீது போர்த்திருந்தோம். அவை நம் நீதி நியாய உணர்வுகளைச் சீண்டிவிடாதிருப்பதற்காக, நாம் அடைந்த பெருந்துன்பங்களையும் நமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் கவசமாகப் பிடித்துக் கொண்டிருந்தோம்.

மிகப்பெரிய துயர் நமக்கு இழைக்கப்படுகிறது என்பதைப் பெருங்குரலெடுத்து அரற்றியபடியே, நம் பெயரால் – தமிழ் தேசத்தின் பெயரால் செய்யப்பட்ட படுகொலைகளையும், மற்றவர்க்கு நாம் இழைத்த துயர்களையும் அங்கீகரித்தபடியுமிருந்தோம்.

நமது சமூகத்தின் தோல்வியும், அறக் குலைவும் – ஆயுத மேந்தாதவர்களையும் பொதுமக்களையும் படுகொலை செய்து மானபங்கப்படுத்த நாம் தொடங்கிய போதே தொடங்கிவிட்டது.

எதிரிகளையும் துரோகிகளையும் அதிகரித்தபடியும் அழித்தபடியுமிருந்தோம். மற்றவர்களின் குற்றங்களையும் குறைகளையுமே பார்த்தபடியிருந்ததில், நம் சமூகத்தின் நியாயவுணர்வை இழந்து துயர்களுடன் கூடிய கொடூரர்களாகிப் போனோம் என்பதே உண்மையானது.

இன்று நாம் மீண்டும் உயிர்த்தாக வேண்டும். இவ்வளவு இழப்புகளைக் கண்டபிறகு, மானுடப் பண்புகளை மேவி பழிதீர்க்கும் உணர்ச்சியே மிகும் என்கிற மேம்போக்கு ஆவேச நெருப்பில் வீழ்ந்துவிடலாகாது.

பழிதீர்த்தலும் பகையும் சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பையும் வாழவைப்பதில்லை, வலிகளும் வாதைகளும் எல்லோர்க்கு மாய்த் தொடர்வதையே அது ஊக்குவிக்கும். இந்த நச்சுச் சுழலிலிருந்து நாம் மீண்டாக வேண்டும்.

# பொலிஸ் அதிகாரிகள் கொலை தீட்டிய சதித்திட்டம் அம்பலம்

### பிரபல பாதாள உலகக் குழுவுக்கு சம்பந்தம்

பொலிஸ் திணைக்களத்தினல முக்கிய பதவி வகிக்கும் அதிகாரிகளை கொலை செய்ய ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் வாழ்ந்து வரும் போதைப்பொருள் வர்த்தகர் ஒருவர் இவ்வாறு, ஒப்பந்தமொன்றை வழங்கியுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த பாதாள உலகக்குழு உறுப்பினர்களிடம் இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. பிரதிப் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட மூன்று உயர் பொலிஸ் அதிகாரிகளை படுகொலை செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த அதிகாரிகளை கொலை செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாகிஸ்தானில் வாழ்ந்து வரும் வெலோசுதா என்ற பிரபல பாதாள உலகக் குழு உறுப்பினரே ஒப்பந்தத்தை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பசுவதைச் சட்டத்தை உருவாக்க ஜனாதிபதி ஆலோசனை

பசுவதைச் சட்டத்தை உருவாக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுளளது. இறைச்சிக்காக பசுக்கள் வதம் செய்யப்படுவதனை இரத்து செய்யும் நோக்கில் புதிய சட்டங்கள் இயற்றப்படவுள்ளன.

சட்டத்தை உருவாக்குமாறு ஜனாதிபதி, ஏற்கனவே சட்ட வாக்கத் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். உத்தேச சட்டத்தை உருவாக்கும் பணிகள் எதிர்வரும் இரண்டு மாதங்களில் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பசுவதைச் சட்டத்தை அமுல்படுத்துவதாக ஜனாதிபதி ஏற்கனவே சிஹல ராவய அமைப்பிற்கு வாக்குறுதி அளித்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டிலிருந்து மாட்டிறைச்சி இறக்குமதி செய்யும் பணிகளை ஆரம்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

# கடும் வறட்சியால் நீரின்றி இறக்கும் கால்நடைகள்

கடும் வறட்சியால் குளங்கள் வற்றிய நிலையில் மேய்ச்சலுக்காக வயல் வெளி களில் விடப்படும் கால்நடைகள் நீருக்காக அலைந்து திரிகின்றன.

சாவகச்சேரி வயல்வெளி; அறுகுவெளி, தனங்கிளப்பு வயல்வெளி, மறவன்புலவு போன்ற பகுதிகளிலேயே இந்த நிலை காணப்படுகின்றது. இந்தப்பகுதி மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் கால்நடைகள் தற்போது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமையால் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. சிலவேளைகளில் கால் நடைகள் நீர் அருந்துவதற்காக 2, 3 கிலோமீற்றர் வரை செல்ல வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

சாவகச்சேரி வயல் வெளிகளிலுள்ள மஞ்சள் குளம், கீரைவாய்க்கால், ஒற்றைப் பனைக்குளம், கொட்டை மரத்தடிக்குளம், இயங்கன் பள்ளக் குளம், நெத்தலிக்குளம் ஏன்பன நீர்வற்றி காய்ந்து போய் உள்ளன. இதனால் கால் நடைகள் நீருக்காக அலைந்து திரிவதுடன் நீரின்றி இறக்கும் சம்பவங்களும் அண்மையில் நடந்தேறியுள்ளன.

இவ்வாறு பயன்தரக்கூடிய குளங்களை புனரமைத்து வறட்சி காலத்திற்கு தேவையான நீரை சேகரித்து வைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் என கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுக்கின்றனர்.

# புலிகளின் காலத்தில் பொலிஸ் அதிகாரங்களை கூட்டமைப்பு கோராதது ஏன்?

(கொழும்பு)

புலிகளின் காலத்தில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை கூட்டமைப்பு ஏன் கோரவில்லை என்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும்தனிப்பட்ட நலன்களுக்காகவும், அச்சம் காரணமாகவும் விடுதலைப் புலிகளுக்கு சிலர் உதவிகளை வழங்கி வந்ததாக அவர் தெரிவித்துள்ளார். உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் சில விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பிரசாரம் செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், வன்னி யுத்தகளத்தில் சிக்கியிருந்த அப்பாவி பொதுமக்களை இந்தப் பிரசாரங்களின் மூலம் ஏமாற்றிவிட முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறித்த மக்கள் மனித கேடயங்களாக பயன்படுத்தப்பட்ட தருணத்தில் எந்தவொரு தரப்பினரும் குரல் கொடுக்கவில்லை எனவும் தற்போது முதலைக் கண்ணீர் வடிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். புலி ஆதரவாளர்களிடமிருந்து தமிழ் மக்களை பாதுகாப்பதே தமது முதன்மைக்கடமை என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# சமூகசேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் கிளி.யில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

(கிளிநொச்சி)

சமூக சேவைகள் அமைச்சினால் கிளிநொச்சி மாவட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட உள்ளன.

கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இவ் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அமைச்சின் அதிகாரி சாந்தகுமார தலைமையிலான குழுவொன்று மிக அண்மையில் சந்திப்புக்களை மேற்கொண்டது.

தனி ஒரு பெற்றோரை குடும்பத் தலைவராகக் கொண்டவர்களுக்கும், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர்கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், முதியோர், மாற்றுவலுவுள்ளோர், தரம் 10, 11 மாணவர்கள் , இளைஞர்கள் ஆகியோருக்கு இவ்விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளது. உளவள ஆலோசனை, வாழ்வாதார மேம்பாடு குறித்த விடயங்கள் இவ் விழிப்புணர்வு நிகழ்வில் நடத்தப்படவுள்ளது. முழு நாள் நிகழ்வாக நடத்தப்பட உள்ள நிகழ்வில் தலா 40 பயனாளிகள் வீதம் பங்கு கொள்ள உள்ளனர்.

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் 7 விழிப்புணர்வு நிகழ்வுகள் இவ் விதம் நடத்துவதற்கு முன்மொழிவுகள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பிரதேசத்தின் அனைத்து கிராமங்களையும் ஒருங்கிணைக்கும் வகையில் இவ் வேலைத்திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாதம் வரையில் இவற்றிற்கு நிதி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. நிதி கிடைத்ததும் உளவள ஆலோசகர், கைத்தொழில் அபிவிருத்தி அலுவலர் ஆகியோருடன் சமூக சேவைகள் அலுவலரும் இணைந்து இந்நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளனர். (90)



# இயற்கை விவசாயம்

ஆர்.எஸ்.நாராயணன்

மண்ணில் இரசாயனங்களை வெடிஉப்பு வடிவில் தூவாமல் இயற்கை இடுபொருட்களை கம்போஸ்டிங் செய்து மக்காக வழங்கும் தனது உத்தியை மேலை நாடுகளில் பரவச் செய்த ஹாவார்ட் மிகவும் தெளிவாக இயற்கை வழிமுறைக்கும் இரசாயன வழிமுறைக்கும் உள்ள நுண்ணிய வேற்றுமைகளை எடுத்துக் காட்டினார்.

இயற்கை விவசாயத்திற்குரிய அடிப்படையான இடுபொருள் கால்நடைக் கழிவுகள் அல்லது தொழு உரம். தொழு உரத்தை மக்க வைக்க வேண்டும். கால் நடைக் கழிவு என்பது எல்லா வகையான நான்கு கால் பிராணிகளின் உண்டு கழித்த சாணம் என்று பொருள். தொழு உரம் என்பது மாட்டுக் கொட்டிலில் கட்டி வைக்கப்படும் மாடு, ஆடுகளின் சாணம் என்று பொருள். மக்காத நிலையில் இத்தகைய சாணத்தின் வெப்ப நிலை 50 முதல் 60 பாகை சென்ரிகிரேட்டில் இருக்கும். இது மக்கும் போது வெப்ப நிலை 25 பாகை சென்ரிகிரேட்டுக்குக் குறையும் போது மக்காகும். பயிருக்குப் பயன்படுத்தலாம். மக்க வேண்டிய சாணியுடன் அறுவடைக் கழிவுகளையும் சேர்த்து கம்போஸ்ட்டாக மக்க வைக்கலாம். அறுவடைக் கழிவில் அடங்குபவை வைக்கோல், சோளத்தட்டை, கடலைக்கொடி, துவரைச்செடி, கரும்புச் சோகை தவிர மரம் உதிர்க்கும் இலைச் சருகுகள் ஆகியவை அடங்கும். கால்நடைக் கழிவுகளில் பல வகையான குணபங்கள் (இறந்த உடல், மாமிசம், எலும்புகள், இரத்தம்) உட்பட சாணம், மூத்திரம் ஆகியவற்றில் அதிகபட்சமாக நைதரசன் என்ற தழைச்சத்தும் பொஸ்பேற் என்ற மணிச்சத்தும் உண்டு. தாவரக் கழிவுகளில் காபன் சத்து (கரிமம்) அதிகம்.

இரசாயன விவசாயத்தில் மண் ஒரு பாத்திரமே. ஒரு தாவரத்தை எரித்து மண் பரிசோதனை செய்யப்பட்ட சாம்பலில் அடங்கியுள்ள சத்துக்களை சிந்தெடிக்காகவும் உலோக வடிவிலும் உப்புத்துகள்களாக இரசாயனம் வழங்கப்படுகிறது. இதை NPK பக்கேஜ் என்பார்கள். மண்ணை ஒரு பாத்திரமாக அனுமானித்து இரசாயனங்களை ஊட்டமாக வழங்குவது இரசாயன விவசாயம். இதனால் மண்வளம் பாதிக்கப்படுவதுடன் மனித வளமும் பாதிக்கப்படுகிறது. இது ஒரு நோய்த்தத்துவம். ஆனால் இயற்கை விவசாயத்தில் 100 கிலோ காபன் பொருள் (அறுவடைக் கழிவு) மீது 20 கிலோ நைதரசன் பொருள் (தொழுஉரம்) வழங்கி, மக்கிய நிலையில் காபன் நைதரசன் விகிதம் 5:1 என்ற விகிதத்தில் உருவாகும் மக்கை இடுபொருளாக வழங்க வேண்டும். மண் என்பது கரிமத் தொழிற்சாலை: மண்ணில் பல கோடிக்கணக்கான உயிரிகளை உருவாக்கி மண்வளத்தைப் பாதுகாத்து உயர்ந்தபட்ச அறுவடை செய்வதே நல்வழி விவசாயம் என்று இரசாயன புரட்சியின்போது எடுத்துக்காட்டியவர் அல்பேர்ட் ஹாவார்ட். இவருடைய கம்போஸ்ட்டிங் முறையில் கால்நடை - தாவரக் கழிவுடன் மரத்தூள், எலும்புத் தூள், பாறை பொஸ்பேற், கடற்பாசி போன்றவை (குறைந்த அளவில்) சேர்க்கப்பட்டு உருவான கரிய மக்கு வீரியம் பெற்று உயர்ந்த விளைச்சலை மேலை நாட்டில் அறிமுகம் செய்தபோது விளைந்தது.

ஹாவார்ட் வாழ்ந்த காலத்தில் உற்ற நண்பரான ஜே.ஜே.ரோடேலும் டாக்டர் நிக்கலசும் ஹாவார்டை அமெரிக்காவுக்கு வரவழைத்தனர். ஹாவார்டின் உதவியால் அமெரிக்காவில் இயற்கை விவசாயம் புத்தூக்கம் பெற்றது. ஹாவார்ட் இங்கிலாந்தில் இருந்தபோது ஃப்ரண்ட் சைக்ஸ், ஈவா பெல்ஃபேர் ஆகியோர் தங்கள் பண்ணைகளை இயற்கைக்கு மாற்றி நல்ல விளைச்சலையும் பெற்றனர்.

அண்மையில் நடந்த "காய்கறி பழங்களில் உள்ள விஷ அளவு" என்ற கருத்தரங்கில், அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் பூச்சி மருந்து விஷம் 100 சதவிகிதம் அதிகம் என்று கூறி வியப்புற்றனர்! கவலை கொள்ளவில்லை.

அனுமதிக்கப்பட்ட அளவு என்பது PPM என்பார்கள். Percentage per million என்றால் பத்து லட்சத்தில் உள்ள பங்கு. பழம் காய்கறிகளில் மில்லியனில் 009 அனுமதிக்கப்பட்ட அளவு என்றால் உண்மையில் 099 என்று பரிசோதனையில் கண்டு பிடிக்கப்பட்டால் விஷம். அப்படிப்பட்ட விஷம் மனிதனை எப்படி பாதிக்கும்? 010லிருந்தே விஷம் என்று அர்த்தம்.

**பூச்சி மருந்து என்பது உயிரைக் குடிக்கும் விஷம் என்பதும் அதைத் தேவையில்லாமல் பயிர் மீது தெளிக்கும்போது பயிர் மட்டுமல்ல, மண், விண் எல்லாமே விஷமாகி அதன் தாக்கம் தாய்ப்பால் வரை சென்று இன்று புற்றுநோய் மிகுந்துள்ளதே சாட்சியாக உள்ளது. இதற்கு எதுவும் விடை உள்ளதா? மாற்று விவசாயம் உள்ளதா? என்றுதான் எனது தேடல் துவங்கியது.**

அல்ட்ரீன், டிடிடி, போன்ற ஓர்கோ குளோரின் பயிர்களின்மீது தெளிக்கும் போது விளைபொருளைத் தவிர மீன், பால்,இறைச்சியும் விஷமாகும்.வயிற்று நோய், ஈரல் நோய், புற்று நோய் ஏற்படும். லிப்ட்டேன், ஹீர்போக்ளோர், என்ரின், டையொசினான் எஞ்சும்போது மேற்படி நோய்களுடன் நரம்பு மண்டலம் பாதிப்புறும். மலத்தியோன், பார்த்தியோன் போன்ற ஓர்கனோ பொஸ்பரஸ் விஷத்தால் கடுமையான வாத நோய் ஏற்படலாம். இதயம் பாதிப்புறும். நாம் மருந்து என்று நினைப்பவை எல்லாம் உயிர்க் கொல்லிகளே.

பூச்சி மருந்து என்பது உயிரைக் குடிக்கும் விஷம் என்பதும் அதைத் தேவையில்லாமல் பயிர் மீது தெளிக்கும்போது பயிர் மட்டுமல்ல, மண்,விண் எல்லாமே விஷமாகி அதன் தாக்கம் தாய்ப்பால் வரை சென்று இன்று புற்றுநோய் மிகுந்துள்ளதே சாட்சியாக உள்ளது. இதற்கு எதுவும் விடை உள்ளதா? மாற்று விவசாயம் உள்ளதா? என்றுதான் எனது தேடல் துவங்கியது.

புதுச்சேரியில் அரவிந்தர் ஆசிரமத்துக்குச் சொந்தமான குளோரியா பண்ணையில் இயற்கை விவசாயம் செய்வதாகக் கேள்விப்பட்டு சென்று பார்த்தேன். அந்த மண்ணில் தொடக்கத்திலிருந்தே இரசாயனங்கள் பயன்படுத்தப்படவில்லை. மொத்தம் 100 ஏக்கர் நிலப்பரப்பில் நெல், வாழை, காய்கறிப் பயிர்களுடன் நேப்பியர் புல், கென்யா புல், கோ 3 முதலிய தீவனப் புற்களும் பயிராகின்றன. விவசாயத்திற்குரிய முக்கியத்துவத்தை விட பசுப்பராமரிப்புக்கான முக்கியத்துவம் கூடுதலாகப் பட்டது. இப்பண்ணையில் மொத்தம் 300 பசுமாடுகள் உள்ளன. பசுமாடுகளின் சாணம் எரிவாயுவாகவும் பயன்படுகிறது. சாண எரிவாயு கொண்டு உணவு சமைக்கப்படுவதுடன் அதன் கழிவு (slurry) மற்றும் மாட்டுக் கொட்டிலில் உள்ள சாணம் எல்லாம் தண்ணீர் விட்டு அன்றாடம் சுத்தம் செய்யும் போது ஒரு பெரிய குட்டை அமைத்து அதில் விடப்படுகின்றன. அந்தக் குட்டையில் மீன்கள், வாத்துகள் வளர்க்கப்படுகின்றன.

இவ்வாறு ஒரு குட்டையே பயிர் நிலத்திற்குரிய உரநீராக மாற்றப்படுவதை கவனித்தேன். குட்டை நீர் ஒரு பங்கும், தூய்மையான பாசன நீர் மூன்று பங்கும் சேர்ந்து செடிகளுக்கும், தென்னைக்கும் நெல் வயல்களுக்கும் பாய்கின்றன. பயிர்களுக்கு நோய் வராமல் இருக்க இயற்கைவழி மூலிகை கரைசல் தயார் செய்யப்பட்டு விசைத்தெளிப்பான் (Power Sprayer) மூலம் தெளிக்கப்படுவதால் இலைவழி ஊட்டமும் கிடைக்கிறது. மூலிகைக் கரைசலில் ஆடாதொடை, வில்வம், காட்டுநொச்சித் தழைகளை அரைத்துப் பின் வேப்பங்கொட்டை மற்றும் பெருங்காயத்தைத் தூள் செய்து கலந்த துவையலை பசு மூத்திரத்தில் கலந்து, அதில் 75 முதல் 80 சதவிகிதம் நீர் கலந்து தெளிக்கப்படுகிறது. இதனால், பயிர்கள் நோயுறாமல், நல்ல விளைச்சல் தருகின்றன. வெள்ளைப் பொன்னி ஒரு ஹெக்டேயரில் 50 க்விண்டால் வரையும் தீவனப்புல் 25 முதல் 30 தொன்கள் வரையிலும் விளைச்சல் தருகின்றன.

குளோரியாப் பண்ணையில் பசுப் பராமரிப்பு இன்னமும் சிறப்பாக இருந்தது. எல்லா மாடுகளும் கராச்சிப் பசுக்கள். அதாவது சிவப்புச் சிந்தி, வெள்ளைச் சிந்தி, சாகிவால், காங்கிரஜ் முதலியவை. இவற்றின் தோற்றம் பாகிஸ்தான் உள்ளடங்கிய தார் பாலைவனம், குஜராத், ராஜஸ்தான் எல்லைகளாகும். இவையெல்லாம் நல்ல கறவை மாடுகள். நல்ல முறையாக வளர்த்தால் நாளொன்றுக்கு 10 முதல் 15 லீற்றர் பால் பெறலாம். ஒவ்வொரு மாட்டுக்கும் 10 முதல் 12 கிலோ பசுந்தீவனம் வழங்கப்படுகிறது. அடர்தீவனமாக கோதுமை, ஓட்ஸ், தவிடு, பயறு, உளுந்து குருணையுடன் மொலாசஸ் (கரும்பிலிருந்து சீனி எடுக்கப்பட்ட பின் கழிவு), காய்கறி கழிவுகள், பூசணம் இல்லாத கடலைப் பிண்ணாக்கு வழங்கப்படுகிறது. 10 லீற்றர் பால் கறக்கும் மாட்டுக்கு சுமார் 5 கிலோ அடர்தீவனம் வழங்கப்படுகிறது. நார்ச்சத்துள்ள உலர்தீவனமாக வைக்கோல், சோளத்தட்டையும் வழங்கப்படுகிறது. பசும்புல்லில் நல்ல நீர்ச்சத்து உள்ளதால் கறவை மாடுகளில் கூடுதல் பால் பெற பசும்புற்கள் மிகவும் அடிப்படையான தீவன உணவு என்று அறியலாம்.

புதுச்சேரி ஆரோவிலில் பேர்னார்ட் கிளார்க் நடத்தும் இயற்கைப் பண்ணையும் கவனத்துக்குரியது.

ஆரோவில் என்ற சொல் உண்மையில் அரவிந்தர் என்ற சொல்லின் திரிபு. வங்காளிகள் ஆரோபிந்தோ என்று உச்சரிப்பார்கள். அதை உச்சரிக்க இயலாத பிரெஞ்ச்காரர்கள் ஆரோ-பில் என்று உச்சரித்தனர். அது கடைசியில் ஆரோவில் ஆயிற்று. ஆரோவில் வளாகத்தைப் பசுமையாக்கிய பேர்னார்ட் கிளார்க், கராச்சி இனி பொலிகாளைகளுடன் இந்திய நாட்டு மாடுகளைச் சேர வைத்து புதிய கலப்பின மாடுகளை உருவாக்கியவர். காடு வளர்ப்பு, பல ரக தானிய சாகுபடி, காய்கறி சாகுபடியில் வட்டப்பாத்தி முறை என்றெல்லாம் புதிய முயற்சிகளைச் செய்தவர். ஆரோவில் பகுதியில் ஒரு காலத்தில் புதராயிருந்த 130 ஏக்கர் கரட்டு நிலத்தைச் சோலையாக்கி மரங்களுடன் இணைந்த உணவுப்பயிர் சாகுபடிக்கு வித்திட்டவர். ஆரோவில்லில் வில்லும் இல்லை அம்பும் இல்லை. அரோ பிருந்தாவன் உண்டு. அன்னபூர்ணா உண்டு. இயற்கை விவசாயத்தில் விளைந்த உணவு உண்டு.



# பிரிவினையைத் தூண்டும் சரத்துக்களை அரசியல் சாசனகத்திலிருந்து அகற்றுங்கள்

## — தெற்கிலிருந்து கிளம்பும் எதிர்ப்பலை —

(கொழும்பு)

பிரிவினையைத் தூண்டும் சகல சரத்துக்களையும் அரசியல் அமைப்பில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்று ஹெல உறுமய கட்சி மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக மாகாண சபைகளுக்கு இருக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரியுள்ளது.

குறிப்பாக வட மாகாண சபைத்தேர்தல் நடாத்தப்படுவதற்கு முன்னதாக பிரிவினைவாதத்தை தூண்டும் சகல சரத்துக்களும் நீக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

இவ்வாறு காணி, பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்படாவிட்டால், 13ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றியமைப்பது குறித்த நாடாளு மன்றத் தெரிவுக்குழுவிலிருந்து வெளியேற நேரிடும் என கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் குறித்து அதன் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க உள்ளார்.

இந்த அறிக்கை கட்சியின் மத்திய செயற்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் அதன் பின்னர் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் இரத்து செய்யப்படாவிட்டால நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதில் பயனில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காணி, பொலிஸ் அதிகாரங்கள் வடமாகாண சபைத்தேர்தலுக்கு முன்னதாக ரத்து செய்யப்படாவிட்டால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து விலகிக்கொள் ளப் போவதாக அமைச்சர் விமல் வீரவன்ச அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் கடலில் மீனவர்கள் இருவர் மாயம்

(மன்னார்)

மன்னாரில் கடலுக்குச்சென்ற மீனவர்கள் இருவர் திரும்பி வரவில்லையென தலைமன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மன்னார், பேசாலையிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரே இவ்வாறு திரும்பி வரவில்லையெனவும் பொலிஸார் கூறினர்.

பேசாலையை சேர்ந்த டியூரன் அப்புகாமி (வயது 38), கமால்டீன் சமீன் (வயது 26) ஆகியோரே கடற்றொழிலுக்காக படகில் சென்றிருந்தனர். இவர்களே திரும்பிவரவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் இம்மீனவர்களின் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்

இவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையை கடற் படையுடன் இணைந்து தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# வடக்கு மாகாணத்தில் இந்திய தலையீடு தெற்கில் வெடிக்கிறது வெகுஜனயுத்தம்

(கொழும்பு)

பொலிஸ், காணி அதிகாரங்களை நீக்கும் வரை அரசு வட மாகாணசபைத்தேர்தலை நடத்தக்கூடாது என வலியுறுத்தியும், "13" விடயத்தில் இந்தியாவின் தலையீட்டுக்கு எதிராகவும் சிங்கள மக்களை அணிதிரட்டி, கொழும்பில் பெரும் போராட்டத்தை இன்று நடாத்துவதற்கு சில அமைப்புக்கள் திட்டமிட்டுள்ளன.

மேற்படி தகவலை உறுதிப்படுத்திய சிங்கள தேசிய அமைப்புகள் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர, அநேகமாக இன்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படலாம் என்றும் கூறினார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள பிரிவினைவாத அதிகாரங்களுக்கு எதிராகத் தலைநகரில் நடத்தப்படவுள்ள போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சிங்கள மக்களுக்கு மேற்படி பௌத்த ஒன்றியம் அறைகூவல் விடுத்துள்ள அதேவேளை, வடமாகாண சபைத்தேர்தலுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்துள்ள சிங்கள தேசியக்கூட்டமைப்பும் இதில் கலந்துகொள்ளும் எனத் தெரியவருகிறது.

அத்துடன், தேசிய அமைப்புகளின் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து சிங்கள பௌத்த அமைப்புகளுக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தில் தமது அங்கத்தவர்களுடன் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

'வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன் 13ஆவது திருத்தத்திலிருந்து பொலிஸ், காணி அதிகாரங்களை நீக்கவேண்டும், இவ்விடயத்தில் இந்தியாவின் தலையீட்டுக்குக் கடும் எதிர்ப்பு" என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ள குறித்த ஆர்ப்பாட்டத்தில் கடும்போக்குடைய அமைச்சர்கள் சிலரும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய அமைப்புகளின் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து சிங்கள பௌத்த அமைப்புகளுக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தில் தமது அங்கத்தவர்களுடன் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# மூத்த கைதிகளுக்கு விடுதலை ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

வயது முதிர்ந்த மரண தண்டனைக்கைதிகளை விடுதலை செய்வது குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்டு நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூத்த குடிமக்களை விடுதலை செய்வதற்கான சாத்தியங்கள் குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறைச்சாலைத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளார்.

அறுபது வயதுக்கும் கூடிய பத்தாண்டுகளுக்கு மேல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மரண தண்டனைக் கைதிகளை விடுதலை செய்வது குறித்து ஆராயப்பட உள்ளது. வெலிக்கடைச் சிறைச்சாலையில் 50இற்கும் மேற்பட்ட வயது முதிர்ந்த மரண தண்டனை கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக்குறிப்பிடப்படுகிறது.

# உளவியல் பாதிப்பு வேகமாக அதிகரிப்பு

## கள ஆய்வில் தகவல்

(கொழும்பு)

நாட்டின் மொத்த சனத்தொகையில் 10 வீதமானவர்களுக்கு உளவியல் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பத்தில் ஒருவர் உளவியல் அழுத்தங்களினால் அவதியுறுவதாக சுகாதார அமைச்சின் ஆய்வுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. 2007ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

நாடு தழுவிய ரீதியில் நடத்தப்பட்ட முதலாவது உளவியல் சார் ஆய்வு மதிப்பீடு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

அதிக அழுத்தம், அதிக யோசனை மற்றும் பிற காரணிகளினால் அதிகளவான மக்கள் உளவியல் சார் நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

நோய்களினால் பாதிக்கப்பட்ட பலர் சிகிச்சை பெற்றுக் கொள்வதில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


# முதலீட்டு முயற்சிகளில் சரிவு மாற்று ஏற்பாடுகள் தயார்

(கொழும்பு)

பிரித்தானிய முதலீட்டாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்ய தயங்குவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமை மற்றும் காணிப்பிரச்சினைகள் போன்றன காரணமாக இலங்கையில் முதலீடு செய்வதில் பிரித்தானிய முதலீட்டாளர்கள் தயக்கம் காட்டி வருவதாக இலங்கைக்கான பிரித்தானிய பிரதி உயர் ஸ்தானிகர் ரொபி புலொச் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே யுத்தத்தின் பின்னர் பிரித்தானிய முதலீட்டாளர்கள் அதிகளவில் இலங்கைக்கு வருகை தரவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



பௌதீக கட்டமைப்பு மாற்றங்கள் வரவேற்கப்பட வேண்டிய வகையில் அமைந்துள்ள போதிலும், சட்டப் பிணக்குகள் குறித்த விவகாரங்களில் அச்சுறுத்தல்கள் நிலவி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அச்சம் காரணமாக அதிகளவான பிரித்தானிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய விரும்பவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதலீட்டாளர்களையும் சுற்றுலாப் பயணிகளையும் அதிகளவில் ஈர்க்க வேண்டுமாயின் இலங்கை சர்வதேச சமூகத்திலிருந்து தன்னை தனிமைப்படுத்திக்கொள்ளக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட காலமாக யுத்தம் நிலவி வந்த இலங்கையில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள சில விடயங்கள் பாராட்டப்பட வேண்டியது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# உயிரியல் கட்டுப்பாடு மூலம் டெங்கு நுளம்பை அழிக்க முயற்சி

(கொழும்பு)

104 வருடங்களுக்குப்பின்னர் இலங்கையில் இனங்காணப்பட்ட ரொபொமயா நுளம்பினம் தொடர்பில் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ ஆய்வு நிலையம் அறிவித்துள்ளது.

இந்த நுளம்பினம் தொடர்பில் அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதுவரை 140 நுளம்பினங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் இதில் 16 பிரிவுகள் அடங்குவதாகவும் மருத்துவ ஆய்வு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

ரொபொமயா நுளம்பு டெங்கு குடம்பிகளை உட்கொள்ளும் சாத்தியம் உள்ளதால் டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு புதிய நுளம்பினத்தை பயன்படுத்துவது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நுளம்பு நாசினிகளை விசுறுவதற்கு முடியாத இடங்களில் ரொபொமயா நுளம்பை பயன்படுத்தி டெங்கு நுளம்புகளை அழிக்க முடியுமா என்பது தொடர்பில் விரைவில் ஆய்வுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மருத்துவ ஆய்வு நிலையத்தின் வைத்திய நிபுணர் சாகரிக்கா சமரசிங்க தெரிவித்துள்ளார்.

# உயிருடன் தீ மூட்டி கொலை இளம் பெண் மீது கொடூரம்

(கொழும்பு)

கட்டுநாயக்க பிரதேசத்தில் மாமனாரினால் தீயிட்டுக் மருமகள் கொலை செய்யப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

கட்டுநாயக்க, குரணை, நத்தா மாவத்தையை சேர்ந்த செல்லப் புலிகே லக் சிகா சுதர்ஸனி ரோஸா என்ற 28 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயாரே கணவரின் தந்தையினால் தீயிட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.


இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, குறித்த பெண் சந்தேக நபரான கணவரின் தந்தையினால் தீயிட்டு சம்பவத்தை அடுத்து எரிகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுமுன் தினம் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சீதுவை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மரணமடைந்த பெண்ணின் மாமனாரை கைது செய்து விசாரணை மேற்கொண்ட போது, மருமகளுக்கு தானே தீ மூட்டியதாக சந்தேக நபர் பொலிஸாரிடம் வாக்குமூலமளித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான நீதிமன்ற விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆறாம் திகதி நடைபெறும் எனவும் அன்றைய தினம் சாட்சிகளை மன்றில் ஆஜர் செய்யுமாறும் நீர்கொழும்பு மேலதிக நீதவான் துலானி எஸ் வீரதுங்க உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக நீர்கொழும்பு பிராந்திய உப பொலிஸ அத்தியட்சகர் பி. ஏ.டி. விஜயரத்னவின் ஆலோசனையின் பேரில் சீதுவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுளனர்.

# கல்வித்துறை சார் செயற்திட்டங்கள் வடமராட்சியில் சிறப்பாக முன்னெடுப்பு



(வடமராட்சி)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலுக்கமைவாக வடமராட்சி மட்டுமல்லாது வடபகுதி மக்களது வாழ்வாதாரமும் பொருளாதாரமும் சிறப்பான முறையில் முன்னேற்றம் கண்டு வருகின்றது என ஆசிரியர் உதயபாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு கட்டைக காடு முள்ளியானில் அமைந்துள்ள தேவா இலவசக்கல்வி நிறுவனத்தின் திறப்புவிழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சரின் வழிகாட்டலுக்கமைவாக வடமராட்சி கிழக்குப் பகுதியில் கல்வித்துறைசார்ந்த செயறதிட்டங்கள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வடமராட்சி கிழக்கில் ஏற்கனவே செம்பியன்பற்று, மருதங்கேணிப்பகுதிகளில் தேவா இலவசக்கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டு அவற்றினூடாக மாணவர்களுக்கான இலவசக்கல்வியை வழங்கிவரும் நிலையில் இப்பகுதி மாணவர்களது கல்வித்துறை மேம்பாட்டைக்கருத்தில் கொண்டும் அமைச்சரிடம் மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இலவசக்கல்வி நிலையம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது

சுனாமியாலும், யுத்தத்தாலும் இங்கு கல்வித்தரம் வீழ்ச்சி கண்டிருந்த போதிலும் யுத்தத்திற்கு பின்னர் இப்பகுதியின் கல்வித்துறை மேம்பாட்டுக்காக அமைச்சர் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார் என்றார்.

இதன்போது ஈ.பி.டி.பி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), மருதங்கேணி பிரதேசசெயலர் திருலிங்கநாதன், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), ஈ.பி.டி.பி யின் வடமராட்சி பிரதேச இணைப்பாளர் ஐ.சிறிரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பி யின் கரவெட்டி பிரதேச இணைப்பாளர் செந்தில்நாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நுகர்வோர் அதிகரிப்பால் சூடுபிடிக்கும் வியாபாரம்

(சுன்னாகம்)

மருதனார்மடம் சந்தைக்குவரும் பொது மக்களின் தொகை நாளுக்குநாள் அதிகரித்துச்செல்வதாகத் தெரி விக்கப்படுகிறது.

சந்தைக்கு உள்ளூர் விவசாயிகளினதும் மற்றும் தென்னிலங்கை விவசாயிகளினதும் பொருட்களின் வருகையும் அதிகரித்துக் காணப்படுவதுடன் பொருட்களின் விலையும் நியாயமானதாக காணப்படுவதால் பொதுமக்கள் மற்றும் ஏனைய கொள்வனவாளர்கள் விலையினை பேரம்பேசி வாங்கக்கூடியதாக உள்ளதாகவும் இதனாலே இச் சந்தைக்குப் பொதுமக்கள் அதிகளவில் வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சந்தையில் நிரந்தரமாக வியாபாரம் மேற்கொள்ளும் வியாபாரிகளுக்கும் ஏனைய வியாபாரிக்கும் சரியான இடவசதிகள் போதாமையாக இருக்கின்ற நிலைமையும் காணப்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. (66)

## நிரந்தர வைத்தியரை நியமிக்குமாறு கோரிக்கை மகஜர் கையளிப்பு

(வரணி)

வரணி பிரதேச வைத்திய சாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறும் அத்துடன் பகல் நேரக்கடமைக்கு அம்புலன்ஸ் சாரதி ஒருவரை நியமிக்கமாறும் கோரி வைத்தியசாலைப் பணிப்பாளாரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் குறை நிறைகள் தேவைகள் தொடர்பாக ஆராயும் அபிவிருத்திச்சபை கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் வைத்தியசாலை பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் வைத்தியசாலைக்கென அம்புலன்ஸ் வண்டியொன்று வழங்கப்பட்டுள்ள போதிலும் பகல் நேரக்கடமைக்கென சாரதி ஒருவர் இல்லாமையால் அவசர தேவைக்காக நோயாளர்களை ஏற்றிச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்தனர்.

அத்துடன் இவ்வைத்திய சாலைக்கு நிரந்தர வைத்தியர் இன்மையால் தூர இடங்களில் இருந்துவரும் மக்கள் சிகிச்சையை பெறமுடியாத நிலை காணப்படுகிறது எனவும் அவாகள் தெரிவித்தனர். மேலும் குழு உறுப்பினர்கள் இதற்கான நடவடிக்கைக்காக கோரிக்கை அடங்கிய மகஜரை வைத்தியசாலை பணிப்பாளரிடம் கையளித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (150)

## போதனா வைத்தியசாலையில் படையினர் இரத்ததானம்



யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு சுமார் 150 இற்கும் அதிகமான படையினர் நேற்று இரத்ததானம் செய்து கொண்டனர். படைப்பிரிவின் 23ஆவது, 512 ஆவது கஜபாகு ரெஜிமெண்டின் தளபதி கேணல் அஜித் பல்லவலவின் வழிகாட்டலில் கேணல் அருண் விஜியக்கோணின் ஏற்பாட்டில் இந்த இரத்ததான நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை படையினர் இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்துள்ளனர் இவ்வைத்தியசாலை இரத்தவங்கியில் இரத்தம் பற்றாக்குறையாக இருப்பதனை அறிந்து படையினர் தாமாகவே முன்வந்து இவ்வாறு இரத்தானம் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## ரம்ழான் நற்சிந்தனை



ரம்ழான் மாதத்தின் இறுதிப்பத்தில் ஒற்றைப்பட நாளில் 'புனித லைலதுல்கத்ர்' இரவை தேடுங்கள்.இவ்விரவு ஆயிரம் மாதங்களை விட சிறந்ததோர் இரவாகும். இவ்விரவு அதிக பிரகாசமாகவும்,தெளிவாகவும், அமைதியாகவும்,அதிக உஷ்ணமோ,அதிக குளிராகவே இருக்காது சந்திரன் தெளிவாகவும்,மறுநாள் சூரியன் சுடரின்றி உதயமாகும்.

நூல்:- அஹ்மத்

## கொடியேற்றம்

ஆவரங்கால் பருவத வர்த்தனியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 31ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 8ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 9ஆம் திகதி தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது.எனவே அம்பாள் அடியார்கள் அனை வரையும் ஆலயத்திற்கு வருகை தந்து பூசை வழிபாடுகளில் கலந்து அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (85)

## முரசின் இன்றைய பலன்



(29.07.2013 திங்கட்கிழமை)

விஜய வருஷம் ஆடி மாதம13ஆம் திகதி.அஸ்வினிநட்சத்திரம் பி.இ 05.32 வரை சப்தமிதிதி ,சித்தயோகம்

இராகுகாலம 07.33- 09.33வரை. சுபநேரம 12.03- 01.33 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கடன் கொடுத்ததால் சஞ்சலம், வாக்குச் சாதுரியத்தினால் காரியசித்தி,வெளியூர் பயணம் பற்றிய சிந்திப்பு, மாணவர் விசாவிற்கு அனுமதி. |
| ரிஷபம் | பரிந்து பேச வெளிக்கிட்டு ஆதாயம், குழந்தைப்பேறு, கௌரவிக்கப்படல்,உடன்பிறந்தோரின் ஒத்தாசை,எதிரியின் தொந்தரவு அகலல். |
| மிதுனம் | நோய் குணமாக்க ஆயுர்வேத மருத்துவத்தை நாடல், காலாவதியான பொருட்கள் பெறல், முகவரிக்குரிய நபரைத்தேடி அலைதல்,முறைப்பாடு செய்ய யோசனை. |
| கடகம் | பயணம் இடைத்தங்கல் நாட்டில் சேர்த்துவிடல், தாயாரின் தேகநலப்பாதிப்பு,சுபகாரிய நிமித்தம் கடன்படல், வெளிநாட்டிலிருந்து உறவினர் வருகை. |
| சிம்மம் | மகிழ்வூட்டும் செய்தி கேட்டல், இணைப்புக்களுக்கு அனுமதி, வங்கிக்கடன் பெறல், குழந்தைப்பாக்கியம், மதிப்பினால் வெகுமதி,புதுமனை கட்டும் திட்டம. |
| கன்னி | கடன்கொடுத்ததால் நிம்மதிக்குறைவு, பதவியைக் காப்பாற்ற முயற்சி,வரன்தேடி அலைதல், பிராணிகளினால் விபத்து,இடமாற்றம் பற்றிய கவலை. |
| துலாம் | சந்தேகம் சந்தோஷத்தைக் கெடுத்தல்,மூத்த சகோதர உதவி,பிதாவின் தேகநலம் மேம்பாடு, பணவரவு,தானதர்ம சிந்தனை, மனஅமைதி குலைதல். |
| விருச்சிகம் | பொறுமையினால் காரிய ஜெயம்,அஜீரணத்தால் அவதி,மருத்துவத்திற்காக வெளியூர் செல்லும் முயற்சி, சுவீப் அதிர்ஷடம். |
| தனுசு | புதிய பொறுப்புக்களை ஏற்றல், வெளியூர் உறவினர் வருகை, தொலைபேசி பிரயாணமூலம் காதல்,மாமன் உதவியால் நன்மை,சீட்டுப்பிடித்து மனத்துயர். |
| மகரம் | ஆவணங்கள் தவறும் அபாயம், தனியார் துறையில் வேலை, நம்பிய விவாகம் நழுவல், ஆயுதத்தால் காயம்,திகதி தப்பிய பொருள் பெறல். |
| கும்பம் | வங்கியின் அனுசரணையால் பணம்,பிரிந்த உறவு சேருதல்,வளர்ப்புப் பிராணி தொலைதல், அயலவருடன் சுமுகநிலை,பணவரவு,விற்பனை அதிகரிப்பு. |
| மீனம் | அச்ச உணர்வினால்'மனநிலை பாதிப்பு, கருத்து வேற்றுமை அகன்றுவிடல், தலைவலியால் வருந்துதல், நம்பி நடந்து துன்பமுறுதல். |

# இறுதிப் பந்தில் அசத்தியது பாகிஸ்தான்




மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான முதலாவது ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி இறுதிப் பந்தில் வெற்றிபெற்றது.

மேற்கிந்தியத்தீவு, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக்கொண்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் மேற்கிந்தியத்தீவின் சென். வின்சன்ட்டில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய மேற்கிந்தியதீவுகள் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது. இதில் போலார்ட் 49, டரன் சமி 30, சாமுவேல்ஸ், டுவைன் பிராவோ தலா 25 ஓட்டங்களைப் பெற்றனர். அறிமுக வீரர் ஸூல்பிகர் பாபர் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 153 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி இறுதிப் பந்தில் வெற்றியிலக்கை அடைந்தது. இறுதிப் பந்தில் ஒரு ஓட்டம் தேவை என்ற நிலையில் அறிமுக வீரர் ஸூல்பிகர் பாபர் சிக்ஸர் விளாசி வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் உமர் அமின் 47, அப்ரிடி 46 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கப்றியல் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக அப்ரிடி தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகளைக்கொண்ட ருவென்ரி-20 தொடரில் பாகிஸ்தான் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

# போல்ட் லண்டனில் கோல்ட்




(லண்டன்)

டயமண்ட் லீக் தடகள சம்பியன்ஷிப் போட்டியின் ஆண்கள் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் ஒலிம்பிக் சம்பியன் உசைன் போல்ட் (ஜமேக்கா) தங்கப் பதக்கம் வென்று அசத்தினார். இங்கிலாந்து தலைநகர் லண்டனில் கடந்த ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியின் ஓராண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்படும் இந்த தொடரில்,இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் உசைன் போல்ட் 9.85 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து முதலிடம் பிடித்தார். அமெரிக்காவின் மைக்கல் ரோட்ஜர்ஸ் (9.98 வி.), நெஸ்டா கார்ட்டர் (ஜமேக்கா 9.99 வி.) அடுத்த 2 இடங்களைப் பிடித்தனர். அரங்கில் திரண்டிருந்த 60,000 இரசிகர்களும் எழுந்து நின்று கை தட்டி சாதனை வீரர் உசைன் போல்ட்டுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

இந்த வெற்றி குறித்து போல்ட் கூறுகையில், "மீண்டும் லண்டன் வந்து போட்டியில் பங்கேற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. இரசிகர்களின் அமோக ஆதரவு தான், வேகமாக ஓடி முதல் இடம் பிடிப்பதற்கான ஆற்றலைத்தருகிறது. முழு வேகத்தை எட்ட முடியவில்லை என்றாலும் 10 விநாடிக்கு குறைவான நேரத்தில் பந்தய தூரத்தைக் கடந்தது திருப்தி அளிக்கிறது. அடுத்து மொஸ்கோவில் நடைபெற உள்ள உலக சம்பியன்சிப்பிலும் சிறப்பாக செயற்பட முடியும் என நம்புகிறேன் என்றார்.

# சோதனையில் மாட்டி




(ராலெய்க்)

அமெரிக்காவின் தடகள வீரர் டைசன் கே மீது முதற்கட்டமாக நடாத்தப்பட்ட சோதனையில் ஊக்க மருந்து பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

100 மீற்றர் ஓட்டப்பந்தய முன்னாள் உலக சம்பியனான அமெரிக்காவின் 30 வயதான டைசன் கே ஊக்க மருந்து சோதனையில் மாட்டிக் கொண்டார். கடந்த மே மாதம் அவரிடம் நடத்தப்பட்ட சோதனையில் ஊக்கமருந்தை பயன்படுத்தியிருப்பது வெளிச்சத்திற்கு வந்தது.

இதனை மறுத்த டைசன் கே, பீ மாதிரி சோதனையை உடனடியாக நடத்துமாறு வற்புறுத்தினார்.அதேசமயம் உலக தடகள போட்டியில் இருந்து விலகினார். இந்த நிலையில் அவரது பீ மாதிரி சோதனை முடிவு வெளியாகி இருக்கிறது. அதிலும் முதல் சோதனையில் இருந்த ஊக்க மருந்து தாக்கம் இருப்பது உறுதியாகியுள்ளது. டைசன் கே மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பது அமெரிக்க தடகள சங்கம் விரைவில் முடிவு செய்யும்.

# தடையை எதிர்த்து மேன்முறையீடு

(பெல்கிரேட்)

தடையை எதிர்த்து மேல்முறையீடு செய்யவுள்ளதாக சேர்பிய ரென்னிஸ் வீரர் விக்டர் டிராய்க்கி தெரிவித்துள்ளார். மான்டே கார்லோ ரென்னிஸ் தொடரில் பங்கேற்றார் முன்னாள் 12ஆம் நிலை வீரர் விக்டர் டிராய்க்கி (சேர்பியா), போட்டி விதிப்படி ஊக்கமருந்து சோதனைக்கு இரத்த மாதிரியை கொடுக்க மறுத்தார். இதனால், சர்வதேச ரென்னிஸ் கூட்டமைப்பு, இவருக்கு 18 மாதம் தடை விதித்தது. இதுகுறித்து விக்டர் டிராய்க்கி கூறுகையில், தடையை எதிர்த்து மேல்முறையீடு செய்யவுள்ளேன். ஏனெனில், லாசனேயில் உள்ள விளையாட்டு தீர்ப்பாயத்தின் மீது நம்பிக்கை உள்ளது. அவர்கள் உண்மையை கண்டறிவர் என்றார்.

# கிழக்காசிய கால்பந்து; வடகொரியா சம்பியன்

(சியோல்)

கிழக்காசிய கிண்ண கால்பந்துத் தொடரில் வட கொரிய அணி சம்பியன் பட்டம் வென்றது.

தென் கொரியாவில் உள்ள சியோல் நகரில், பெண்களுக்கானகிழக்காசிய கோப்பை கால்பந்துத் தொடர் நடைபெற்றது. இதில் வட கொரியா, தென் கொரியா, ஜப்பான், சீனா அணிகள் பங்கேற்றன. நேற்று முன்தினம் நடைபெற்ற கடைசி சுற்றுலீக் போட்டியில் வடகொரியா, சீனா அணிகள் மோதின.

ஆட்டத்தின் 2ஆவது நிமிடத்தில் வடகொரியாவின் ஹயாங் ஒரு கோல் அடித்தார். இதற்கு சீன வீராங்கனைகளால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் வட கொரியா 1-0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் கடைசி நிமிடம் வரை போராடிய இரு அணியினரால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில், வட கொரிய அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு லீக் போட்டியில், தென்கொரிய அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஜப்பானை தோற்கடித்தது.




லீக் சுற்றில் விளையாடிய மூன்று போட்டியில் 2 வெற்றி, ஒரு சமநிலை உட்பட 7 புள்ளிகள் பெற்ற வட கொரிய அணி சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. தலா ஒரு வெற்றி, ஒரு தோல்வி, ஒரு சமநிலை உட்பட 4 புள்ளிகள் பெற்ற ஜப்பான் அணி இரண்டாவது இடம் பிடித்தது. தலா ஒரு வெற்றியுடன் தென் கொரியா (3 புள்ளி), சீனா (3 புள்ளி) கடைசி இரண்டு இடங்களை பிடித்தன.

# ஊக்கமருந்து; சிக்கினார் குரோஷிய வீரர்

சென்னை ஓபன் ரென்னிஸ் போட்டியில் இருமுறை சம்பியன் பட்டம் வென்றவரான குரேஷியாவின் மரின் சிலிச் ஊக்கமருந்து பயன்படுத்தியது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டி, கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்றது. அப்போட்டியில் பங்கேற்ற மரின் சிலிச், ஊக்கமருந்து சோதனைக்காக சிறுநீர் மற்றும் இரத்த மாதிரிகளை அளித்திருந்தார்.

அந்த சோதனைகளின் முடிவுகள் தற்போது வெளியாகியுள்ள நிலையில், மரின் சிலிச் ஊக்கமருந்து பயன்படுத்தியது தெரியவந்துள்ளதாக குரேஷிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்த மேலும் விபரங்கள் அடுத்த வாரம் வெளியாகலாம் என்று தெரிவித்துள்ள ஊடகங்கள், இது தொடர்பாக மரின் சிலிச், தனது விளக்கத்தை சர்வதேச ரென்னிஸ் சம்மேளனத்துக்கு அனுப்பியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளன.

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியின்போதே சிலிச்சின் சோதனை முடிவுகள் வெளியாகியுள்ளன. அதைத் தொடர்ந்தே விம்பிள்டன் 2ஆவது சுற்றில் விளையாடவிருந்த சிலிச், அதிலிருந்து விலகியுள்ளார் என்றும் அங்குள்ள ஊடகங்கள் கூறியுள்ளன.

விம்பிள்டன் போட்டியின்போது இடது முழங்காலில் காயம் ஏற்பட்டதாகக் கூறி, சிலிச் விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது. சர்வதேச தரவரிசையில் தற்போது 15ஆவது இடத்தில் உள்ள சிலிச், 2009, 2010 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சென்னை ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டங்கள் குவிப்பது கடினம்



ஒருநாள் போட்டியில் புதிய விதிமுறை அறிமுகப் படுத்தப்பட்டிருப்பதால் துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்கள் குவிப்பது கடினமாக இருக்கின்றது என இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தவான் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் போட்டியின் புதிய விதிமுறை காரணமாக இரண்டு புதிய பந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது முதல் ஓவரில் ஒரு புதிய பந்து பயன்படுத்தப்பட்டால் அடுத்த ஓவரில் மற்றொரு பந்து பயன்படுத்தப்படுகிறது. இதனால் பந்து அதிக அளவில் ஸ்விங் ஆகின்றன. தற்போதுள்ள நிலையில் முதல் 10 ஓவரில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களால் மிகப்பெரிய அளவில் ஓட்டங்கள் எடுக்க முடியவில்லை. மிகவும் கவனமாக விளையாட வேண்டி உள்ளது. தொடக்கத்திலேயே விக்கெட் சரிந்து விடாமல் இருப்பதற்கு எந்த வகையான ஷொட் அடிப்பது என்பது முக்கியமானது. சம்பியன் கிண்ணத் தொடர், மேற்கிந்தியத்தீவில் நடைபெற்ற முக்கோணத் தொடர் ஆகியவற்றில் வெற்றி பெற்றமைக்கு அணி வீரர்களின் ஒற்றுமையே காரணம். இளம் வீரர்கள் அனைவரும் நல்ல உடல் தகுதியுடன் உள்ளனர். களத்தடுப்பிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அனைத்து விடயங்களிலும் சரியான பாதையில் நாம் செல்வதாக உணர்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



யாழ். மாவட்ட பிரதேசங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவின்போது ஒலிம்பிக் சுடர் ஏற்றப்படுவதையும், தடகளப் போட்டியில் வென்ற வீராங்கனைகள் கௌரவிக்கப்படுவதையும், பெண்கள் கால்பந்துப்போட்டியில் வென்ற சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி விருந்தினர்களுடன் நிற்பதையும் காணலாம்.

# யாழ். மாவட்ட விளையாட்டு விழா

## தெல்லிப்பளை பிரதேச செயலகம் சம்பியன்

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆண், பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல், ஆண், பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டி, ஈட்டி எறிதலும், உத்தியோகத்தருக்கான கயிறிழுத்தல் போட்டியில் இரு பிரிவிலும் சங்கானை பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது அசத்தியது.

பெண் கால்பந்தாட்ட போட்டியில் வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மோதியது. இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 1-0 கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆண்களுக்கான கால் பந்தாட்ட போட்டியில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்பாண பிரதேச செயலக அணி மோதியது. இதில் இரு அணி களும் இறுதி வரை கோல் பெற்றுக்கொள்ளவில்லை. இதன் காரணமாக தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் யாழ்பாண பிரதேச செயலக அணி 4-3 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதில் ஒட்டுமொத்தமாக தெல்லிப்பளைப் பிரதேச செயலகம் 81 புள்ளிகளைப் பெற்று சம்பியன் பட்டத்தையும்,. யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் 44 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப் போட்டி நிகழ்வின், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினராக சங்கானைப் பிரதேச செயலர் சோதிநாதன் உட்பட யாழ்.மாவட்ட முன்னாள் விளையாட்டு அதிகாரி திருமதி ரூபசிங்கம், மாவட்டவிளையாட்டு அதிகாரி, பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர்கள், விளையாட்டுக் கழகங்களைச்சேர்ந்த தலைவர், செயலர்கள், வீர,வீராங்கனைகள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (93,180)

# அசத்தியது

## மயிலங்காடு ஞானமுருகன்

(நெடியகாடு)

நெடியகாடு விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

நெடியகாடு விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடாத்தப்பட்ட இத்தொடரில் முன்னணி அணிகள் உட்பட யாழ். மாவட்டத்திலுள்ள பல அணிகள் பங்குகொண்டன.

அணிக்கு 9 பேர் கொண்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மின்னொளியில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் ஊரெழு றோயல் அணியினை எதிர்த்து மயிலங்கா்டு ஞானமுருகன் அணி மோதியது.

போட்டியின் முதற்பாதியில் ஊரெழு றோயல் அணியின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்பட்டது. அவ்வணி கோலடிக்கும் முனைப்பில் ஈடுபட்டது. எனினும் முடிவுக்கும் திறன் இல்லாமையினால் கோல்கள் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

முதற்பாதியின் இறுதி நேரத்தில் ஊரெழு றோயல் அணிக்கு தண்டனை உதை வாய்ப்பு ஒன்று கிடைத்தது. அதனைக் கோலாக்கி முதற்பாதியாட்டத்தில் 1:0 என்று ஊரெழு றோயல் அணி முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியாட்டத்தில், ஆக்கிரோஷமாக விளையாடிய ஞானமுருகன் அணி விரைவிலேயே பதில் கோலடித்தது. போட்டி நேரம் முடிவடையும் போது இரு அணிகளும் தலா ஒரு கோல் பெற்றிருந்தன.

இதனால் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் சிறப்பான முறையில் செயற்பட்ட ஞானமுருகன் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச்சம்பியனாகியது.

# கரம் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரம் சங்கம் நடாத்தும் வருடாந்த அசோசியேசன் கரம் சம்பியன்சிப் போட்டி எதிர்வரும் 10,11,12ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப் போட்டி திறந்த போட்டியாகவும் மற்றும் பாடசாலை ரீதியாக 14 தொடக்கம் 18 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கிடையேயும் இடம்பெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# சாவற்கட்டு வி.க. கால்பந்து

## கலைஒளி வசம் கிண்ணம்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் கால்பந்துப் போட்டியில் கலைஒளி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

ஆனைக்கோட்டை சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சாவற்கட்டு மகாத்மா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கலைஒளி அணியும், பாரதி அணியும் மோதின. ஆரம்பம் முதலே கலைஒளி வீரர்கள் ஆக்ரோசத்துடன் செயற்பட்டு கோல் மழை பொழிந்தனர். இறுதியில் கலைஒளி அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் ரேட்றெஞ்சர் அணியும், சென். பீற்றர்ஸ் அணியும் மோதின. இதில் சென். பீற்றர்ஸ் அணி வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (180)

# செந்தூரன் சிறப்புப் பந்து வீச்சு

## வென்றது யாழ். மத்திய கல்லூரி



(யாழ்ப்பாணம்)

செந்தூரனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 33 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று ஆட்டம் ஒன்று கடந்த வாரம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் பெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி 47 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டினோஜன் 23, நிசாந் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பீற்றிக் நான்கு, ராஜ்பாலு மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 131 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி செந்தூரனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 26.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் சரோன் 45, அனோஜன், டானியல் தலா 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் செந்தூரன் 9.1 ஓவர்கள் பந்து வீசசில் 36 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (எஸ்.பி.)



# பனங்காட்டுத் தமிழனை மேவிய கறுவாக்காட்டுத் தமிழன்!

– வி.சின்னத்தம்பி கட்டுரையிலிருந்து.

வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் தினத்தை அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து, பல்வேறு கட்சிகள் அதற்குத் தயாராகி வருகின்றன. இன்றைய அரசாங்கத்தை நடத்தி வருகின்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும், ஐந்து தமிழ் கட்சிகளின் கூட்டணியான தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில்தான் பிரதான போட்டி நிகழப் போகின்றது. (இதில் தமிழ் காங்கிரஸ் கட்சி மனதில் கொள்ளப்படவில்லை. ஏனெனில் அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனியான ஒரு கட்சி அமைத்துவிட்டதால், தமிழ் காங்கிரஸ் இன்னமும் செயல்படுகிறதா என்பது தெரியவில்லை)





இதில். ஒரு விசேடமான அம்சமென்னவெனில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் கட்சிகளில் தமிழ் - சிங்கள் - முஸ்லீம் கட்சிகள் அடங்குகின்றன. ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 5 கட்சிகளுமே முற்றுமுழுதாகத் தமிழ் கட்சிகள் மட்டுமே.

அத்துடன் புலிகளால் தமது தேவைகளுக்காக உருவாக்கப் பட்ட இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பில் வீ.ஆனந்தசங் கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணி, த.சித்தார்த்தனின் புளொட், தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ எல்லாமே புலிகளால் வேட்டையாடப்படுவதற்காக முன்னர் துரத்தித் துரத்தி கலைக்கப்பட்ட கட்சிகளாகும்.

இப்படியான ஒரு கதம்பக் கூட்டணியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் பலத்தை உலகிற்குக் காட்ட ஒன்று சேர்ந்திருப்பதாக தமது வழமையான "ரீலை" விட்டிருக்கின்றன. இவர்களுக்கிடையில் முதலமைச்சர் வேட்பாளர் தெரிவிலேயே முதலாவது இழுபறி ஆரம்பித்துவிட்டது. தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், வடபகுதி மக்களுக்கு நன்கு பரிச்சயமானவருமான மாவை சேனாதிராசாவை முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்பதே பெரும்பாலான தமிழரசுக் கட்சியினரின் விருப்பமாகும்.

ஆனால் பெரும்பாலான கட்சி உறுப்பினர்களின் விருப்பத்தை மீறி, பனங்காட்டுத் தமிழனான மாவை சேனாதிராசாவை நிராகரித்துவிட்டு, கொழும்பு கறுவாக் காட்டுத் தமிழனான சி.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளர் ஆக்கியுள்ளது கூட்டமைப்புத் தலைமை.

இந்த "கொழும்புத் தமிழ் விளையாட்டு" தமிழரசுக் கட்சிக்கு புதுமையான ஒன்றல்ல. இராணி அப்புக்காத்துகளான தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகமும், தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலமும் கொழும்பில் வாழ்ந்து கொண்டே 5 வருடங்களுக்கு ஒருமுறை தேர்தல் நேரத்தில் மட்டும் யாழ்ப்பாணம் வந்து அரசியல் செய்து தமிழ் மக்களின் காதில் பூ சுற்றிய பெரும் கில்லாடி அரசியல்வாதிகள்.

இப்பொழுது நீண்ட காலம் எதிர்பார்த்த வடக்கு மாகாண-சபைத் தேர்தல் வந்துள்ளது. அதனால் மீண்டும் ஒருமுறை யாழ்ப்பாணத் தமிழனுக்கும் (மாவை சேனாதிராசாவை முன்னிறுத்தி) கொழும்புத் தமிழனுக்கும் ஒரு போட்டி ஏற்பட்டது. வழமைபோல வலதுசாரித் தமிழ் தலைமை (தற்பொழுது அது தமிழ் தேசியக் கூட்டமைப்பு) கொழும்புத் தமிழரான சி.வி. விக்னேஸ்வரனை தனது முதலமைச்சர் வேட்பாளராக அறிவித்து தனது வழமை யான கைங்கரியத்தை நிலைநிறுத்தியுள்ளது. மாவை சேனாதிராசாவை முதலமைச்சர் வேட்பாளராக்க வேண்டும் என, பெரும் ஆர்ப்பாட்டங்கள் செய்த தமிழரசுக் கட்சியினரை சம்பந்தனும், சுமந்திரனும் தமது சாம, பேத, தான, தண்டங்களைப் பாவித்து அடக்கிவிட்டனர். "விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத" கணக்காக மாவை சேனாதிராசாவும் அதை ஏற்று அறிக்கை விடுத்தாயிற்று.

மாவை சேனாதிராசாவை முதலமைச்சர் வேட்பாளராக் காமல், விக்கினேஸ்வரனை ஆக்கியதில் தமிழ் தேசியக் கூட்டடைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளுக்கும் உள்ளூர மகிழ்ச்சிதான். குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் ரெலோ கட்சியினருக்கு பிரத்தியேக மகிழ்ச்சி. ஏனெனில் கடந்த சில ஆண்டுகளாக கூட்டமைப்புக் குள் தமிழரசுக் கட்சிக்கும், ஏனைய கட்சிகளுக்கும் ஒரு அதிகாரப் போட்டி நிலவி வந்தது. அதில் மாவையே பிரதான குறியாக இருந்து வந்தார். ஏனெனில், கூட்டமைப் பின் தலைவராகத் தற்போது பதவி வகிக்கும் சம்பந்தன் வயது மூப்புக் காரணமாக நீண்ட காலத்திற்கு அப்பத வியை வகிக்க முடியாது என்றபடியால், மாவை சேனாதிராசா அப்பதவிக்கு வரலாம் என்ற எதிர்பார்ப்பு அனைவருக்கும் இருக்கின்றது.

ஆனால் மாவை சேனாதிராசா அப்பதவிக்கு வருவதை கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகள் விரும்பவில்லை. குறிப்பாக அப்பதவிக்குத் தான் பொருத்தமானவர் என நினைத்து அதற்காகத் திட்டமிட்டு காய்களை நகர்த்தி வரும் ஈ.பி.ஆர்.எல்.எப்பின் சுரேஸ் பிரேமச்சந்திரன், அதன் காரணமாகவே சம்பந்தனுடன் அண்மையில் பகிரங்க மோதலிலும் ஈடுட்டார். இந்தச் சூழ்நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சராகத் தற்செயலாக மாவை சேனாதிராசா தெரிவா-னால், அந்தப் பதவி அவரை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கேள்விகளுக்கு அப்பால்பட்ட தலைவராக ஆக்கிவிடும் என்ற பயம், சுரேஸ், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருக்கு மட்டுமின்றி, தமிழரசுக் கட்சிக்கு கடிவாளம் போட வேண்டும் எனக் கருதும் வீ.ஆனந்தசங்கரி, சித்தார்த்தன் போன்றோருக்கும் உண்டு.

எனவே மாவை சேனாதிராசாவை வடக்கின் முதலமைச்சர் வேட்பாளராக்குவதை விட, வடக்கில் எவ்வித வேர்களும் அற்ற சி.வி.விக்கினேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக்கியதில், மாவையினதும் தமிழரசுக் கட்சியினதும் எதிர்ப்பாளர் களுக்கிடையில் ஒரு தற்காலிக திருப்தி ஏற்பட்டுள்ளது. இதை அறிந்துதான் "பழமும் தின்று கொட்டையும் போட்ட" சம்பந்தன் காய்களை நகர்த்தியிருக்கிறார்.

மாவை சேனாதிராசாவை முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்காதது, யாழ்ப்பாணத்த வர்களதும், தமிழரசுக் கட்சியினதும் தோல்வி என சில தரப்புகளால் பார்க்கப்படுகிறது. ஆனால் உண்மை என்னவெனில், விக்கினேஸ்வரனின் நியமனம் யாழ்ப்பாணத்தவர்களின் தோல்வி என்பதைவிட, இந்தத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறுமாக இருந்தால், அது வடக்கு மக்களின் தோல்வி மட்டுமின்றி, முழு தமிழ் மக்களினதும் தோல்வியாக அமையும்.

---

• 1876ஆம் ஆண்டு அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்தார். கண்டுபிடித்தபோது தம் உதவியாளரோடு தொடர்பு கொண்டு "மிஸ்டர் வாட்சன் அவர்களே! இங்கே வாருங்கள்... என்னிடம் வாருங்கள்" என்றார். இதுதான் தொலைபேசியில் பேசப்பட்ட உலகின் முதல் உரையாடல்.

• ஒக்ஸ்போர்ட் இங்கிலீஷ் டிக்ஷனரியை பூர்த்தி செய்ய ஜேம்ஸ் முர்ரேவுக்கு 36 ஆண்டு காலம் பிடித்தது. அவர்



# தெரியுமா?

இறந்து 13 ஆண்டுகள் ஆன பின்னரே, 1928ஆம் ஆண்டு முதல் தொகுதி வெளியாயிற்று!

• அல்பேர்ட் ஐன்ஸ்டீனால், நான்கு வயது வரை பேச முடியாது. அதன் பின்னரே பேசத் தொடங்கினார்.

• வின்சென்ட் வான்கோ அவரது வாழ்நாளில் விற்பனை செய்தது ஒரேயொரு ஓவியம் மட்டுமே! அவர் இறந்த பின்னரே அவரது ஓவியங்கள் இலட்சக் கணக்கான டொலர்களுக்கு விற்பனை ஆயின!

• மகாத்மா காந்தி விமானப் பயணம் செய்ததே இல்லை. அவருடைய தென்னாபிரிக்க பயணம், இங்கிலாந்து பயணமும் கப்பலில்தான். இந்தியப் பயணம் முழுவதும் ரயில் வண்டியில்.

• மிகக்குறைந்த வயதில் இலட்சாதிபதியானவள் சார்லி சாப்ளினோடு நடித்த ஆறு வயது ஜாக்கி கூகன் என்ற சிறுமி.

• சேர். ஆர்தர் கொனன் டொயில், அவரது ஆசிரியரும் மருத்துவருமான டாக்டர் ஜோசப் பெல் என்பவரை மையமாக வைத்தே "ஷெர்லொக் ஹோம்ஸ்" பாத்திரத்தை உருவாக்கினாராம்.

• முதலாம் உலக யுத்தத்தின்போது கிச்னர் பிரபு, பிரிட்டனின் யுத்த அமைச்சராக நியமனம் பெற்றார். அந்த சமயத்தில் அவரது உருவப் படத்துடன் வெளியிடப்பட்ட போஸ்டர்களை எந்த பக்கத்திலிருந்து நின்று பார்த்தாலும் நம்மையே பார்ப்பது போல் அமைந்திருந்தனவாம்!

• கத்தரிக்கோலைக் கண்டு பிடித்தவர் மோனாலிசா ஓவியத்தை வரைந்த ஓவியர் லியனார்டோ டாவின்சி.

• கிரகங்களின் சுழற்சியைக் கண்டறிந்து சொன்னவர் கெப்ளர் என்ற விஞ்ஞானி.

• விண்வெளிப் பயண விதிகள் முதன்முதலில் சேர்.ஐசக் நியூட்டனால்தான் வரையறுக்கப்பட்டன.

• சுதந்திரப் போராட்ட வீராங்கனை ஜான்சி ராணி இரண்டு கைகளாலும் போர்வாள் ஏந்தி சுழற்றக்கூடிய சாமர்த்தியசாலி.

• உலகப் புகழ் பெற்ற பார்பி பொம்மை யைப் படைத்தவர் ரூத் ஹான்ட்லர் எனும் பெண்மணி ஆவார்.

---



# நீளத் துகில் அணிந்து...

150 அடி நீளம், 1500 அடி அகலம் இது என்னவாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? இங்கிலாந்தைச் சேர்ந்த ஆடை வடிவமைப்பாளர் ஹென்றி ஹோண்ட் என்ற இளம் பெண், தயாரித்துள்ள கவுனின் அளவுதான் அது.

இந்தக் கவுனை அணிந்து கொண்டு லண்டனில் உள்ள ட்ரினிட்டி லீட்ஸ் ஷொப்பிங் சென்டரில் பிரபல மொடல் அழகி கோலெட் மார்ரோ காட்சியளித்தார். உலகிலேயே மிக நீளமான ஆடை என்று இது கருதப்படுகிறது.


# காமிக்ஸ் 1


— சார்லஸ் —


பெரும்பான்மையானவர்களைப் போலவே நானும் சிறுவயதில் காமிக்ஸ் புத்தகங்களின் தீவிர வாசகனாக இருந்தேன். வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் 2-3 புத்தகங்களை வாங்கிப் படித்துவிட்டு, மற்ற நண்பர்களுக்கும் ஒரு சுற்று படிக்கக்கொடுத்து, ஞாயிற்றுக்கிழமைக்குள் மீண்டும் ஒருமுறை அவைகளைப் படித்துவிடுவது என் வழக்கமாக இருந்தது. விதவிதமான துப்பறிதல்கள், மர்மங்கள், சாகஸங்கள்.. அற்புதமான கதாநாயகர்கள்.. அதிபயங்கர எதிரிகள்.. அழகிய காதலிகள்.. டெக்ஸாஸ், லொஸ் ஏஞ்சல்ஸ், லண்டன், ரியோ டி ஜெனிரோ, அடர் காடுகள், மலைகள், பாலைவனங்கள், தீவுகள் என்று நான் அறியாத நிலப்பரப்புகள்" இளவயதில் என் உலகை விரிவுகொள்ள வைத்தவை காமிக்ஸ்களே.

அவற்றில் வரும் குத்தும் கைகள், ஓங்கிய கத்திகள், வெடிக்கும் துப்பாக்கிகள் பற்றிய சித்திரங்கள் ஆழமாக என் மனதுக்குள் பதிந்திருக்கின்றன என்பதை இப்போதும் பலசமயங்களில் ஒரு திடுக்கிடலோடு நான் உணர்வதுண்டு. மனதுக்குள் ஏற்கனவே இருக்கும் ஒரு இருள் மூலையில் அவையெல்லாம் சென்று சேகரமாகியிருக்கின்றன என்றும், அந்த வித்துக்களே வன்முறைகள் நிறைந்த திரைப்படங்களில் எனக்கு ஓர் ஆழமான ஈர்ப்பை உண்டாக்கியிருக்கின்றன என்றும் நான் நினைப்பதுண்டு.

பிறகு தொலைக்காட்சியில் நான் பணியாற்றிய ஆரம்ப நாட்களில், என் நண்பனும், திரைப்படக் கல்லூரியில் என் ஜூனியருமான பாஸ்கர் (பின்னாட்களில் அவன் தெலுங்குத் திரையுலகுக்குள் நுழைந்து "பொம்மரில்லு" என்ற படத்தின் மூலம் முன்னணி இயக்குநர்களுள் ஒருவனாக மாறினான், அந்தப்படம் தமிழில் "சந்தோஷ் சுப்ரமணியம்" என்ற பெயரில் என்னுடைய இன்னொரு ஜூனியரான ராஜாவால் எடுக்கப்பட்டது) தான் ஒரு தொலைக்காட்சித் தொடருக்காக காமிக்ஸ் கதாநாயகன் ஒருவனை மையமாக வைத்து கதைபண்ணிக் கொண்டிருப்பதாகச்சொல்லி அவ்வப்போது வந்து ஆலோசனைகள் கேட்பதுண்டு. நான் அப்போது "ஜீ பூம் பா" என்கிற வெற்றிகரமான சிறுவர் தொடருக்கு காமிக்ஸ்களால் என் வீடு முழுவதும் நிரம்பிக் கொட்டிக்கொண்டிருந்தது. அந்த வாசிப்பின் வழி காமிக்ஸ்களின் அதிநாயகர்களின் உலகுக்குள் நுழைந்து, நானே சொந்தமாக ஒரு கதையை எழுதிவிடுவதுதான் என் நோக்கம். காமிக்ஸ்களும் கார்ட்டூன்களும் சிறுவர்களின் மனதில் வன்முறையை விதைப்பதாக ஏற்கனவே எனக்கொரு எண்ணமிருந்ததால், இப்போது சிறுவர்களுக்காகக் கதை எழுதும் இடத்தில் நான் இருக்கும் போது சமூகப்பொறுப்போடு செயற்பட வேண்டுமென்று




திரைக்கதை எழுதிக்கொண்டிருந்தேன். பின்பு சில வருடங்கள் கழித்து அதே பாஸ்கர் வந்து ராடான் நிறுவனம் "இரும்புக்கை மாயாவி" கதாபாத்திரத்தை மையமாக வைத்து எடுக்கப்போகும் தொடருக்கு நான் கதையும் திரைக்கதையும் எழுதிக்கொடுக்க முடியுமா என்று கேட்டான். நான் இரும்புக்கை மாயாவியின் இரசிகன் என்பதால் உடனே சம்மதித்தேன். அதிலிருந்து என் காமிக்ஸ் வாசிப்பின் இரண்டாவது இன்னிங்ஸ் தொடங்கியது.

சில மாதங்களுக்கு, புத்தகக்கடைகள் மற்றும் சாலையோரத்தில் பழைய புத்தகம் விற்பவர்கள், தனிநபர்கள் சேகரித்து வைத்திருந்தவை என்று எல்லா இடங்களிலிருந்தும் வாங்கிவந்து குவிக்கப்பட்ட நினைத்துக்கொண்டேன். ஆனால் அதேசமயம் சுவாரஸ்யமாகவும் இருந்தாகவேண்டும்.


ஒரு திரைக்கதை எழுத்தாளன் தன் சூழலைப் பற்றி ஏதும் அறியாதவனாக, தான் மிகவும் இரசித்தவைகளைக் கிரகித்துக்கொள்ளாதவனாக இருக்கமுடியாது என்பதையும் நான் இங்கு விளக்கவேண்டியதில்லை. சொந்தக்கற்பனை என்பது புதிதாக ஒரு மலர் பூப்பதைப் போலத்தான் நடக்கும், ஆனால் அதற்குத் தேவையான நீரும் தாதுச் சத்துக்களும் வேரின் பல கிளைகள் வழியாகப் பலகாலம் உறிஞ்சப்பட்டிருக்கும்.

அந்தத் திரைக்கதையில், ஒரு சாதாரண இளைஞன் எப்படி இரும்புக் கை மாயாவியாக மாறினான் என்கிற முன்கதையையும், இப்போது அவன் முக்கியமான வில்லன்களை எதிர்கொண்டு போராடிக்கொண்டிருக்கும் கதையையும் இணையாகவே சொல்லிக்கொண்டு வருவதுபோன்று அமைத்திருந்தேன். தொடரின் முதல் மாதத்தின் இறுதியில் அந்த இரண்டு கதைகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்து, நாயகன் தன் உற்ற நண்பனாக இருந்தவனையே, தன்னை ஒரு அதிமனிதனாக மாற்றிய கர்த்தாவையே, இப்போது, அதிபயங்கர வில்லனாகக் கண்டடைவதாக எழுதியிருந்தேன். தொடர்ந்து பின்னால் கதையில் நிகழப்போகும் திருப்பங்கள் வளர்ச்சிகள் போன்றவற்றையும், பத்து விதவிதமான புதிய வில்லன்களையும் நான் உருவாக்கிக் கொடுத்தேன்.

ஆனால் அந்தத் தொடர் எடுக்கப்படாமலே நின்று போனது. நான் பணியாற்றி வெளிவந்தவைகளைவிட அப்படி நின்றுபோனவையே அதிகம் என்பதால் நான் மெல்ல அதை மறந்து வேறு வேலைகளில் ஈடுபட ஆரம்பித்தபோது, காமிக்ஸ் வாசிப்பும் கூடவே நின்று போனது.

(தொடரும்)

## அருவிக் குளிப்பு பற்றி கி.ராஜநாராயணன்


ராஜநாராயணன்

சுகமாக இருக்கிறதே என்று மிக நீண்ட நேரம் அருவியின் கீழ் நிற்பது குளிப்பில் ஆனந்தத்தை அடைவதற்குப் பதிலாக தன்னையே சித்திரவதை செய்து கொள்வதற்கு ஒப்பாகும்!

நீண்ட நேரம் அருவிக்குள் நின்றால் குளிப்பின் சுகத்தை இழந்துவிடுவோம்.

எண்ணெய் தேய்த்துக் கொண்டுதான் அருவியை அணுக வேண்டும் என்ற சம்பிரதாயம் நிலைத்துவிட்டது. அது கட்டாயமில்லை. அருவி உடம்பில் விழும் இடங்களில் சிறிது எண்ணெய் வைத்துக் கொள்ளலாம். தப்பில்லை; ரொம்பவும் குளிர் நேரமாய் இருந்தால் எண்ணெய் தேய்த்துக் கொள்வது இதமாக இருக்கும்.

அருவிக்குள் நுழைந்த உடனேயே திரும்பிவிடக்கூடாது. நுழைந்த உடன் குளிரும். மேலும் நின்று கொண்டே இருந்தால் குளிர் மாறி, நம் உடம்பில் ஒரு சூடு பரவ ஆரம்பிக்கும். இதுதான் நாம் வெளியே வருவதற்கு ஏற்ற தருணம்.

வெளியே வந்த பிறகும் குளிப்பின் ஆவல் அடங்கவில்லை என்றால் திரும்பவும் சென்று இதே மாதிரி குளிக்கலாம்.

('அன்னப்பறவை' என்ற நூலில்)

## Super man கிறிஸ்டோபர் ரீவ்

வயது வேறுபாடு இல்லாமல் உலகிலுள்ள அனைவரையும் கவர்ந்த கதாபாத்திரம் "Super man'. 1978ஆம் ஆண்டு வெளிவந்த "Super man' திரைப்படம் உலக அளவில் மிகப் பெரிய வெற்றி பெற்றது. இப்படத்தில் சூப்பர்மேனாக நடித்தவர்தான் கிறிஸ்டோபர் ரீவ். அவரால் உண்மையிலேயே பறக்க முடியும், மிக உயரமான கட்டடங்களிலிருந்து குதிக்க முடியும் என்று நம்பிய சிறுவர் சிறுமியரும் உண்டு. நியூயோர்க் நகரில் 25-9-1952-இல் பிறந்த கிறிஸ்டோபர் ரீவுக்கு Super man திரைப்படங்கள் அழியாப் புகழைப் பெற்றுத் தந்தன. Super man வரிசையில் நான்கு படங்களில் நடித்தார்.

இவருக்கு 27-5-1995இல் போதாத காலம் வந்தது. குதிரையின் மீது ஏறி, தடைகளைத் தாண்டிக் குதித்து இலக்கைச் சென்றடையும் போட்டி ஒன்றில் கலந்து கொண்டார். ஆரம்பத்தில் சில தடைகளைத் தாண்டிக் குதித்த அவரது குதிரை, அதன்பின் திடீரென்று நிற்கவே, சவாரி செய்து வந்த வேகத்தில் கிறிஸ்டோபர் குதிரையிலிருந்து தூக்கி எறியப்பட்டு,



தலைகுப்புற தரையில் விழுந்தார். அதன் விளைவாக அவருடைய முதுகுத்தண்டின் சில பாகங்கள் பாதிக்கப்பட்டன. கழுத்துக்குக் கீழே ஏறக்குறைய உடல் உறுப்புகள் அனைத்தும் செயல் இழந்துவிட்டன. ஆனால் மூளை மட்டும் பாதிக்கப்படவில்லை.

உடனே மிகச் சிறந்த மருத்துவ நிபுணர்கள் செய்த தீவிர சிகிச்சையால் கிறிஸ்டோபர் ரீவ் உயிர் பிழைத்தார். இருப்பினும் அவருடைய வாழ்க்கை படுக்கையிலும் சக்கர நாற்காலியிலுமாகக் கழிந்தது. பல சமயம் மூச்சுவிட உதவும் செயற்கைக் கருவியின் மூலம் மூச்சுவிட்டு உயிர் வாழ்ந்து கொண்டிருந்தார்.

செயற்கைக் கருவிகள் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலியிலேயே வலம்வந்தார். அவருடைய மனைவி டானாவின் உற்சாகமூட்டும் பேச்சுக்களும் உலக முழுவதுமுள்ள அவரது இரசிகர்கள் செய்த பிரார்த்தனைகளும் ரீவுக்குத் தான் வாழ வேண்டும் என்ற ஆசையையும் மன உறுதியையும் அளித்தன.

1996ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த ஒஸ்கார் விருது வழங்கும் விழாவில் சக்கர நாற்காலியில் தோன்றிப் பேசி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். அதே ஆண்டில் அட்லாண்டாவில் நடந்த ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் போட்டிகளை முன்னின்று நடத்தி வைத்தார். பிறகு தொலைக்காட்சி படங்களுக்கு இயக்குநராகப் பணிபுரிந்தார். சில படங்களுக்கு டப்பிங் குரல் கொடுத்தார்.



திரைப்படங்களும் தயாரித்தார். தனது சுயசரிதை ஒன்றையும் வெளியிட்டார்.

அந்தக் காலகட்டத்தில் இவர் செய்த சமூகசேவைகள் ஏராளம். தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்காக அரசாங்கத்திடம் அதிக தொகை பெற்றுக் கொடுத்தார். எதிர்பாராத விபத்துக்களினால் ஏற்படும் செலவைச் சமாளிக்கப் பணம் சேமிக்கும் பழக்கத்தை மக்களிடம் ஊக்குவிக்க ஏராளமான முயற்சிகளை மேற்கொண்டார். தானே ஒரு தொண்டு நிறுவனத்தையும் நடத்தி இவரைப் போல பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உதவினார். ஏறத்தாழ இருபது மில்லியன் டொலர் நிதி திரட்டி ஏராளமான உதவிகளைச் செய்துள்ளார்.

10-10-2004 அன்று நியூயோர்க் நகரிலுள்ள மருத்துவமனை ஒன்றில் காலமானார்.

உடல் செயலிழந்த போதிலும் கிறிஸ்டோபர் ரீவ் நிகழ்த்திய சாதனைகள் போற்றுதலுக்குரியது. இவரது சேவைகளால் இவரது புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும்.


# பாடசாலைக்கல்வி வாய்ப்புக்கிடைக்காத மாணவர்கள்; தீர்வு என்ன?

ஒவ்வொரு துறையிலும் அத்துறையின் வளர்ச்சி பற்றி ஆராய வேண்டும் எனின் அத் துறைசார் தரவுகள் அவசியமாகின்றன. ஆனால் தனியே இத்தரவுகள் எந்த ஒரு செய்தியையும் சொல்லமாட்டாதனவாகவே காணப்படுகின்றன. இத்தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு வெளி வருகின்ற தகவல்களே சில செய்திகளை வெளிப் படுத்துகின்றன. இந்த வகையில், ஒவ்வொரு துறையிலும் அத் துறை சார் தரவுகளின் அடிப் படையில் கணிக்கப்படுகின்ற குறிகாட்டிகள் அத் துறை சார் செய்திகள் சிலவற்றைச்சொல்வ னவாக அமைவதைக் காணலாம். இக்குறி காட்டிகள் மூலம் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பிரதேசங்களை ஒப்பீடு செய்வதற்கும் மற்றும் கடந்த ஆண்டுகளுடன் ஒப் பிட்டு வளர்ச்சிப்போக்கினை அவதானிப்பதற்கும் பெரிதும் உதவியாக உள்ளமையைக் காணலாம்.

உதாரணமாக நாடுகளின் மானிட அபிவிருத் திச் சுட்டெண் ( வாழ்நாள் எதிர்பார்ப்பு, கல்வி, வருமானத்தின் கூட்டுச்சுட்டெண்) குறித்து நோக்குகையில் 2011 ஆம் ஆண்டு இலங்கை 0.691 ஆகவும், இந்தியா 0.547 ஆகவும் ஆப் கானிஸ்தான் 0.398 ஆகவும் பூட்டான் 0.500 ஆகவும் உள்ளமையைக் காணலாம் (இலங்கை மத்திய வங்கி, யூன் 2012 ). மேற்குறிப்பிட்ட நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது இலங்கை யானது, மானிட அபிவிருத்தியில் முன்னணியில் உள்ளமை தெளிவாகின்றது.

இவ்வாறு ஒரு நாட்டின் கல்வி தொடர்பான விடயங்கள் குறித்தும் பல்வேறு குறிகாட்டிகள் உள்ளமையினைக் காணலாம். ஒரு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பாகச்சிந்திக்கின்ற நாம் பிரதேசத்தின் கல்வி நிலை தொடர்பாக இலகுவில் இனங் காணக்கூடிய வகையில் உள்ள கல்விக் குறிகாட் டிகள் பற்றி அறிதல் அவசியமானகும். குறித்த பிரதேசத்தின் கல்வி நடவடிக்கைகளை மீளாய்வு செய்யவும், இரு பிரதேசங்களுக்கிடையிலான நிலையினை ஒப்பீடு செய்யவும், தேசிய மற்றும் சர்வதேச நிலைகளுடன் குறித்த பிரதேசத்தினை ஒப்பீடு செய்யவும், சாதனை மட்டத்தினைக் குறிப்பிட்டுக்காட்டவும், குறித்த பிரதேசத்தின் நிலையினை இலகுவாக அளவீடு செய்து கொள்வதற்கும், இறுதி இலக்கினை அடைய இன்னும் எவ்வளவு தூரம் பயணஞ்செய்ய வேண்டியுள்ளது என்பதனை அறிவதற்கும் எனப் பல்வேறு வகைகளில் இக் கல்விக் குறிகாட்டி களைப்பயன்படுத்திக்கொள்ளலாம்.

*(இலங்கை கல்வி நிர்வாக சேவை திறந்த , மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைகள், ஏனைய போட்டிப்பரீட்சைகள், தடைதாண்டல் பரீட்சைகள் போன்றவற்றை எதிர்கொள்ளத்தயாராகிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்காகவும், இலங்கையின் கல்வி அபிவிருத்தியில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சமகால மாற்றங்களை அறிய விரும்பும் ஆர்வலர்களுக்காகவும் இக் கட்டுரை பிரசுரமாகின்றது)*



சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்
கடம்பேசுவரன் மணிமாறன்
BSc, PGDE, MSc, MEd, SLEAS-111
உதவிக் கல்விப் பணிப்பாளர் ( திட்டமிடல்)
மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

கல்வியில் ஏராளமான குறிகாட்டிகள் பயன்படுத்தப்படினும்,

1. மொத்த உள்ளெடுப்பு வீதம் (Gross Intake Rate) (GIR)
2. தேறிய உள்ளெடுப்பு வீதம் (Net Intake Rate) ( NIR )
3. மொத்தச் சேர்ப்பு வீதம் (Gross Enrolment Rate) (GER)
4. தேறிய சேர்ப்பு வீதம் (Net Enrolment Rate) (NER)
5. வகுப்பேற்ற வீதம் ( Promotion Rate (PR)
6. மீளவும் உள்ளேற்பு வீதம் (Repetition Rate) (RR)
7. இடைவிலகல் வீதம் (Drop – Out Rate) (DR)
8. மாணவர் ஆசிரியர் விகிதம் (Student Teacher Ratio) (STR)
9. உய்வு வீதம் (Survival Rate) (SR)
10. வரவுச் சராசரி ( Attendance Rate)(AR)

ஆகிய குறிகாட்டிகள் அடிக்கடி கல்வியுல கில் பேசப்படுகின்ற குறிகாட்டிகளாகக் காணப் படுகின்றன. இக் கட்டுரையில் மொத்த உள் ளெடுப்பு வீதம், தேறிய உள்ளெடுப்பு வீதம், மொத்தச்சேர்ப்பு வீதம், தேறிய சேர்ப்பு வீதம் ஆகியன குறித்து சிறிது ஆழமாக நோக்கு வோம். இந் நான்கு குறிகாட்டிகளும் அனை வருக்கும் கல்வியில் சமசந்தர்ப்பமும் வாய்ப் பும் வழங்குதல் என்ற இலங்கை அரசின் முக்கிய குறிக்கோள் தொடர்பில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியினை அளவிடுவதற்குப் பெரிதும் உதவியாக உள்ளன. முன்னர் இலங்கையின் கட்டாயக்கல்வியின் வயதெல்லை 5 தொடக் கம் 14 ஆக வரையறுக்கப்பட்டிருந்த போதிலும் இவ் வயதெல்லையான 5 தொடக்கம 16 ஆக தற்பொழுது உயர்த்தப்பட்டுள்ளது.

பாடசாலைக்குச்செல்ல வேண்டிய வயது டைய பிள்ளைகள் பாடசாலைக்குச்செல்கின் றனரா என்பதனை இலகுவில் அறிவதற்கு இக் குறிகாட்டிகள் மிக்க பயனுடையதாகவுள்ளன.

## மொத்த உள்ளெடுப்பு வீதம்

முதலாம் தரத்தில் புதிதாக நுழைந்தவர்களது மொத்த எண்ணிக்கையினை (வயதுக் கட்டுப் பாடின்றி), ஆரம்பப் பாடசாலை நுழை வய தில் உள்ள ( 5 வயதினைப்பூர்த்தி ) அப் பாடசாலைக்குரிய வழங்கல் பிரதேச சிறார்க ளின் வீதமாகக் குறிக்கப்படுவது மொத்த உள்ளெடுப்பு வீதமாகும்.

இதன் மூலம் ஆரம்பக்கல்வியினைப் பெறுகின்ற மாணவர்களின் வீதத்தினை அறிய முடிகின்றது.

தரம் ஒன்றில் புதிதாகச் சேர்ந்த மாணவர் களின் எண்ணிக்கையானது பாடசாலையில் உள்ள பாடசாலைப் பதிவேடுகள் அல்லது பாடசாலை அதிபர், தரம் 1 ஆசிரியர்

$$GIR = \frac{\text{குறித்த ஆண்டில் தரம் 1இல் புதிதாகச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை}}{\text{பாடசாலை வழங்கல் (ஏந்து) பிரதேசத்தில் உள்ள குறித்த ஆண்டில் 5 வயதினைப் பூர்த்தி செய்த பிள்ளைகளின் எண்ணிக்கை}} X100$$

ஆகியோரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை ஏந்து பிரதேசத்தில் உள்ள குறித்த ஆண்டில் 5 வயது பூர்த்தி செய்த பிள்ளைகளின் எண்ணிக்கையானது கிராமசேவையாளர் அல்லது பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் அல்லது சனத்தொகைக்கணக்கெடுப்பு அல்லது விசேட செயற் திட்டம் ஒன்றின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறாக மொத்த உள்ளெடுப்பு வீதம் கணிக் கக்கூடிதாக இருக்கும். இம் மொத்த உள்ளெடுப்பு வீதமானது குறித்த பிரதேசத்தில் கடந்த வருடம் பாடசாலையில் சேர வேண்டிய வயதுடைய பிள்ளைகள் கடந்த வருடம் பாடசாலையில் சேராமல் இருந்து இவ் வருடம் பாடசாலையில் சேருகின்ற சந்தர்ப்பம் காணப்படுகின்ற பொழுது மொத்த உள்ளெடுப்பு வீதம் 100 இலும் அதிகமாகக் காணக்கூடிய சந்தர்ப்பமும் ஏற்படலாம். மொத்த உள்ளெடுப்பு வீதம் ஆனது குறித்த ஆண்டில் பாடசாலையில் சேர்ந்த மாணவர்களினைக் கருத்திற் கொள்கின்றதே தவிர குறித்த ஆண்டில் பாடசாலை சேர வேண்டிய வயதுடைய பிள்ளைகள் பற்றிக்கருத்திற்கொள்ள வில்லை. எனவே இதற்காக தேறிய உள்ளெடுப்பு வீதம் பயன்படுத்தப்படுகின்றது

## தேறிய உள்ளெடுப்பு வீதம்

பாடசாலை நுழை வயதில் (ஐந்து வயது பூர்த்தி ) முதலாம் தரத்தில் புதிதாக நுழைந்தவர்களது மொத்த எண்ணிக்கை, ஆரம்பப் பாடசாலை நுழை வயதில் உள்ள ( 5 வயது பூர்த்தி) அப்பாடசாலைக்குரிய வழங்கல் பிரதேச சிறார்களின் வீதமாக தேறிய உள்ளெடுப்பு வீதம் அமையும்.

தேறிய உள்ளெடுப்பு வீதத்தின் மூலம் மொத்த உள்ளெடுப்பு வீதத்திலும் பார்க்கத் துல்லியமாக, பாடசாலை நுழைய வேண்டிய வயதில் உள்ள சிறார்களில் எத்தனை வீதமானோர் ஆரம்பக் கல்வியினைப் பெறுகின்ற மாணவர்கள் என்பதனைத் துல்லியமாக அறிய உதவுகின்றது.

$$NIR = \frac{\text{குறித்த ஆண்டில் தரம் 1இல் புதிதாகச் சேர்ந்த 5வயதினைப் பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை}}{\text{பாடசாலை வழங்கல் (ஏந்து) பிரதேசத்தில் உள்ள குறித்த ஆண்டில் 5 வயதினைப் பூர்த்தி செய்த பிள்ளைகளின் எண்ணிக்கை}} X100$$

தரம் ஒன்றில் புதிதாகச் சேர்ந்த 5 வயதினைப் பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கையானது பாடசாலையில் உள்ள பாடசாலைப்பதிவேடுகளில் இருந்தோ அல்லது பாடசாலை அதிபர், தரம் 1 ஆசிரியர் ஆகியோரது பதிவேடுகளில் இருந்தோ பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை ஏந்து பிரதேசத்தில் உள்ள குறித்த ஆண்டில் 5 வயதினைப்பூர்த்தி செய்த பிள்ளைகளின் எண்ணிக்கையானது கிராமசேவையாளர் அல்லது பிரதேசசெயலர் அல்லது மாவட்டச்செயலகம் அல்லது சனத்தொகைக்கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட தரவில் இருந்து அல்லது விசேட செயற்திட்டம் ஒன்றின் மூலமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இதன் மூலம் ஒரு பிரதேசத்தில், பாடசாலையில் சேர வேண்டி வயதுடைய மாணவர்கள் பாடசாலையில் சேராமல் இருப்பின் இலகுவில் இனங்காணக்கூடியதாக இருக்கும்.

# தளராத கல்விப்பணியாற்றும் கல்லூரி நூறு ஆண்டுகள் தாண்டிய சேவை

*காரை. ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் விழாக்கோலம்*

(யாழ்ப்பாணம்)

கலாநிதி. ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலய நூற்றுஇருபத்தைந்தாவது ஆண்டு நிறைவுவிழா எதிர்வரும் முதலாம்இரண்டாம் திகதிகளில் நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒகஸ்ட் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் முதல் நாள் முதல் அமர்வில் நிறுவுநர் தினமும் சயம்பு மலர் வெளியீடும் இடம்பெறும். அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் குழந்தைகள் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி வி.விஜயரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். வடமாகாணப் பிரதிக் கல்விச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன், காரைநகர் கேட்டக்கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன், காரை அபிவிருத்திச் சபைத்தலைவர் தி.சிவாமகேசன், கொழும்பு பழைய மாணவர் சங்க உபதலைவர் சி.நேசேந்திரன், ஸ்தாபகர் முத்துசயம்புவின் பேரன் சு.கனகரத்தினம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக்கலந்துகொள்கின்றனர். முதல்நாள் அமர்வில் நிறுவுநர் நினைவுப்பேருரையும் மாணவர் கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

முதல்நாள் இரண்டாவது அமர்வு அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும். இந் நிகழ்வில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வ ராஜா பிரதமவிருந்தினராகவும், வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் க.இராஜேந்திரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளார்.


தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அதிபர் திருமதி வா.தவபாலன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன், யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறைத் தலைவர் திருமதி கலாநிதி அ.சத்தியசீலன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி பரமேஸ்வரி கணேசன் சிறப்பு விருந்தினராகவும், தீவக கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கணபதி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

# வேகக்கட்டுப்பாட்டுக் குறியீடு ஏ-9 வீதியில் அவசியமானது




(கொடிகாமம்)

ஏ-9 வீதியானது காப்பெற் வீதியாக மாறியபின் விபத்துக்கள் அதிகம் இடம்பெறுகின்றமை வழக்கமாக மாறியுள்ளது. ஏ-9 வீதியில் வேகக்கட்டுப்பாட்டுக் குறியீடு இன்னமும் காட்சிப்படுத்தப்படவில்லை. அதிகரித்த வேகம், கைத்தொலைபேசியில் உரை யாடிக்கொண்டு வாகனம் செலுத்துதல், வாகனங்களிற்கு இடையே இருக்கவேண்டிய இடைவெளி, போட்டிபோட்டுக் கொண்டு பேருந்துகள் செல்வது போன்ற காரணங்களினால் அடிககடி விபத்துக்கள் இடம் பெறுகின்றன.

அண்மையில் சாவகச்சேரி நுணாவில் சந்தியில் இடம் பெற்ற விபத்து முன்னே சென்ற கார், பின்னே வந்த மோட்டார் சைக்கிளை கவனிக்காது திடீரென சந்தியால் திரும்பியது, மீசாலை பஸ்தரிப்பிடத்தில் மூதாட்டி பேருந்தில் இருந்து இறங்கி வீதியைக் கடக்க முற்பட்டவேளை டிப்பருடன் மோதுண்டமை, கொடிகாமம் இராமாவில் சந்தியால் திரும்ப முற்பட்டவேளை முதியவர் வடிரகவாகனத்துடன் மோதுண்டமை, எல்லாம் இறப்பு சம்பவமே இடம்பெற்றது. இதனை விட பலர் படுகாயமடைந்தமை, காயமடைந்தமை எனப் பட்டியல தொடர்ந்தே செல்கின்றன.

எனவே ஏ-9 வீதிக்கு வேகக் கட்டுப்பாட்டு குறியீட்டை நிறுவி அதனை மீறுபவர்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வரவேண்டும். வேகக்கட்டுப் பாட்டுக் குறியீட்டை நிறுவினால் ஓரளவேனும் விபத்துக்கள் குறைய வாய்ப்புள்ளதாகப் பொது மக்கள் கருதுகின்றனர்.

(130)

# பாடசாலைகளை அறிவு மையமாக மாற்றும் செயற்றிட்ட மீளாய்வுக் கூட்டம்



(யாழ்ப்பாணம்)

மகிந்த சிந்தனையில் குறிப்பிட்டவாறு இலங்கையை அறிவு மையமாக மாற்றும் முயற்சியின் அடித்தளமாக பாடசாலைகளை அறிவு மையமாக மாற்றும் செயற்றிட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமொன்று வடமாகாண கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் செயற்றிட்டத்தின் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் உலக வங்கியின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டல் குழுத்தலைவர் டாக்டர். விசாகா, உலக வங்கியின் ஆலோசகர்கள், உள்ளூராட்சி அமைச்சின் உயர் அதிகாரிகள், மாகாண கல்விப்பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கல்வித்திணைக்கள உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

தச்சுவேலை நன்கு தெரிந்தவர்கள் வேக்சொப் ஒன்றிற்குத் தேவை. உதவியாளரும் விரும்பத்தக்கது.
தொடர்புக்கு - 0775048478

---

யாழ். நகரிலுள்ள அலுவலகம் ஒன்றிற்கு பெண் எழுதுவினைஞர் தேவை.
தொடர்புக்கு - 0785285342.

---

வவுனியாவில் உள்ள தனியார் காரியாலயத்திற்கு சிங்களமொழி பேசக்கூடிய தமிழ் பெண்கள் தேவை. வயது 19 - 28 வரை, சம்பளம் 15.000, பயிற்சிகள் வழங்கப்படும்.
தொடர்புக்கு - 0775561883.

---

யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் அமைந்துள்ள Toeic நிறுவனத்தில் பணிபுரிவதற்கு பின்வருவோர் தேவை. வரவேற்பாளர் (பெண்), ஆங்கில ஆசிரியர் (ஆண்/பெண்), பாடவிபரிப்பாளர், சந்தைப்படுத்தல் உதவியாளர், திட்ட அலுவலர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்/அதிபர்) நேர்முகத் பரீட்சைக்கான பதிவுகள் 3 நாட்களுக்குள்.
தொடர் புக்கு - 0778575406.

---

Photo shop இல் அனுபவம் உள்ள பெண்கள் தேவை. தகுதியானவர்கள் நேரில் வரவும். கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புக்கு - 0772908787.

---

G.C.E A/L முடித்த கணினி அறிவுடைய 20 - 28 வயதிற்குட்பட்ட மும்மொழியிலும் தேர்ச்சி பெற்ற பெண் (Receptionist ,Consultant) தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புக்கு - 0117555514.

---

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒலிபரப்பு செய்யப்படும் இணைய வானொலி ஒன்றில் அறிவிப்பாளர் மற்றும் சந்தைப்படுத்தல் உத்தியோ கத்தர், பணிகளுக்கு உடனடி வேலைவாய்ப்பு.
தொடர்புக்கு - 0770868542, 0722299933.

---

அச்சகவேலை தெரிந்தவர்கள் பழக விரும்புபவர்கள் தேவை. (பெண்கள்).
தொடர்புக்கு - 0770366123.

---

டயர் வேலை தெரிந்த பாஸ் ஒருவர் தேவை.
தொடர்புக்கு - 0777310935, 0727310935.

---

கார் சாரதி தேவை. வாரத்தில் 4 நாட்கள் வேலை - விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு - 0779607094.

---

எழுதுவினைஞர்கள் தேவை. சிங்களமொழி பேசக்கூடிய தமிழ் பெண்கள் தேவை. சம்பளம் 15000 ரூபா. பயிற்சி வழங்கப்படும்.
தொடர்புக்கு.வவுனியா - 0775561883, மட்டக்களப்பு - 0776838104, ஹட்டன் - 0774430166.

---

தொழில் வெற்றிடங்கள் பல. உணவு, தங்குமிடம் இலவசம், வருகைதரும் நண்பர்கள் விவாகமானவர்களாயின். ஒரே நிறுவனத்தில் வேலை (வயது 18 - 55) நாடு முழுவதும்.
தொடர்புக்கு - 0779749222, 0728881228.

# இலங்கை பற்றிய ஐ.நா.சபையின் மதிப்பீட்டு அறிக்கை தயாராகிறது



(ஜெனிவா) .

யுத்தத்துக்குப்பிந்திய நிலையில் நாட்டில் ஏற்பட்டி ருக்கும் சமூக பொருளாதார முன்னேற்றங்கள் குறித்தும் மனித உரிமைகள் பேணப்படுவது தொடர்பாகவும் மதிப்பீட்டு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையினால் மேற்படி விடயங்கள் குறித்து தகவல் திரட்டப்பட்டு இந்த அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகின்றது.

கொழும்புக்கு விஜயம் செய்ய உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இந்த அறிக்கையுடனேயே கொழும்புக்கு வருகை தரவுள்ளார்

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது இலங்கை விஜயம் குறித்து, நவநீதம் பிள்ளை இந்த அறிக்கையை சமர்ப்பிப்பார் என எதிர் பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 9ம் திகதி முதல் 27ஆம் திகதி வரையில் பேரவையின் 24ஆம் அமர்வுகள் நடைபெறவுள்ளன.

அமர்வுகளின் ஆரம்ப உரையை நவநீதம்பிள்ளை ஆற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரையில் நவநீதம்பிள்ளை இலங்கையில் தங்கியிருப்பார் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதேவேளை, நாட்டின் நிலைமைகளை நேரில் பார்வையிடுவதற்கு இந்த விஜயம் சந்தர்ப்பமரக அமையும் என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# சொகுசு வாகனங்கள் இறக்குமதி அரசு அதிக கவனம்

(கொழும்பு)

நவம்பர் மாதத்தில் வருகைதரும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் பயன்படுத்துவதற்காக அதி சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் தயாராகி வருகிறது.

இதன்படி 7 ஆம் வரிசை பிஎம் டபிள்யூ, மெஸ்டாஸ பென்ஸ எஸ் கிளாஸ் வாகனங்களை இறக்குமதி செய்யத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த வாகனங்கள் பொது நலவாய தலைவர்களால் பயன்படுத்தப்பட்ட பின்னர் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் மற்றும் 6000 பிரதிநிதிகளின் போக்குவரத்துக்கள் தொடர்பில் மாத்திரம் 1930 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்தநிலையில் பொது நலவாய செலவுகளின் அடிப்படையில் பொதுநலவாய பிரதிநிதிகளின் தங்குமிடங்களுக்காக 85 மில்லியன் ரூபாய்களும், வர்த்தக அமர்வுக்காக 90 மில்லியன் ரூபாய்களும் பொதுமக்கள் அமர்வுக்காக 95 மில்லியன் ரூபாய்களும், உத்தியோகபூர்வ வசதிகளுக்காக 290 மில்லியன்களும், உறவினர்களின் நலன்களுக்காக 35 மில்லியன் ரூபாய்களும, சமூக திட்டங்களுக்காக 75 மில்லியன் ரூபாய்களும், மாநாட்டு அனுமதிகளுக்காக 850 மில்லியன் ரூபாய்களும், ஏனைய செலவுக்காக 105 மில்லியன் ரூபாய்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதனை தவிர பிரசாரங்கள் மற்றும் இணையத்தளங்களுக்காக 1900 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்படவுள்ளன.

# புகழ் பரப்புகிறது காலிக் கடற்கரை

உலகிலுள்ள சிறந்த 100 கடற்கரைகளுள் காலி மாவட்டத்திலுள்ள உனவடுன கடற்கரை 79ஆவது இடத்தினைப் பெற்றுள்ளது.

சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்பட்ட தரப்படுத்தலிலேயே உனவடுன கடற்கரை சிறந்த 100 கடற்கரைகளுள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

உலகில் உள்ள பல்வேறுபட்ட நிலப்பகுதிகளை தரப்படுத்தலுக்குட்படுத்தி அதில் சிறந்த நிலப்பகுதிகளை தெரிவு செய்யும் அச்செய்தி நிறுவனம் இம்முறை உலகிலுள்ள கடற்கரைகளை தரப்படுத்தலுக்குட்படுத்தி அதில் சிறந்த 100 கடற்கரைகளைத் தெரிவு செய்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளால் ஈர்க்கப்பட்ட அனைத்து நாடுகளும் குறித்த தரப்படுத்தலுக்கு உள்வாங்கப்பட்டதுடன் அதில் சிறந்த நூறு கடற்கரைகள் அறிவிக்கப்பட்டன.

உலக நாடுகளில் காணப்படும் சிறந்த கடற்கரைகளுள் முதலாவது இடத்தினை சீசெல்ஸ், டிக்யூ தீவில் அமைந்துள்ள கிரேன்டி அன்சே கடற்கரை பெற்றுள்ளது.

இதில் இலங்கையின் கடற்கரையான உனவடுன 79ஆவது இடத்தினை பெற்றுள்ளது. 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட உனவடுன கடற்கரைப்பகுதி இன்று சிறந்த 100 கடற்கரைகளுள் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டமை பெருமைக்குரிய விடயமாக கருதப்படுமென அந்தச்செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கடலலைச் சறுக்கல் விளையாட்டுப் போட்டிகளுக்கு சிறந்த100கடற்கரைகளுள்46ஆவது இடத்தினை அறுகம்பே கடற்கரை பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது .

# சாட்சிகளுக்கு அச்சுறுத்தல்

தெரனியகல நூரியாவத்த சாட்சியங்களுக்கு காவல் துறையினர் அச்சுறுத்தல் விடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பிரதேசத்தில் இடம் பெற்ற அநீதிகள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பிலான தகவல்களை மூடிமறைக்கும் முனைப்புக்களில் சிரேஸ்ட காவல்துறை உத்தியோகத்தர்கள் முனைப்பு காட்டி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

நூரியா வத்த தோட்ட அதிகாரி படுகொலை செய்யப்பட்டதனைத் தொடர்ந்து குறித்த பிரதேசத்தில் இடம் பெற்ற பல்வேறு சம்பவங்கள் பற்றிய தகல்கள் அம்பலமாகியிருந்தன.

சந்தேகநபர்களுடன் பல காவல்துறை உத்தியோகத்தரகள் தொடர்புகளைப் பேணி வருவதாகவும் இதனால் சாட்சியங்களை மூடி மறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்களுக்கு எதிராக சாட்சியளிக்கக்கூடாது என சிலர் அச்சுறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.


# கட்சி தாவியது பணத்துக்காக அல்ல

பணத்திற்காக கட்சி தாவவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து விலகிச்செல்லும் அனைவருக்கும் எதிராகவும் இவ்வாறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவது வழமையாகும் என அவர சுட்டிக்காட்டியுள்ளார்.

மாகாணசபைத்தேர்தலில் போட்டியிடும் நோக்கில் தாம், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததாகத் தெரிவித்துள்ளார். கட்சிக்கு துரோகம் இழைக்கவில்லை எனவும், பணம் பெற்றுக்கொண்டதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தொழில்நுட்பத்துறைப்பாட அறிமுகம் மாணவர்க்கான அரியவாய்ப்பு



த.தவசேகா
(B.S.C/P.G.D.E/P.G.D.P/MED) (MERIT)
ஆசிரியர்
(யாழ்.மத்திய கல்லூரி)

உயிர் முறைத் தொழில்நுட்பவியல் பாடத்தை அவதானிப்பின் இதில் உயிரியல், தாவரவியல், புவியியல், விவசாயம், இரசாயனவியல்சார் விடயங்கள் அடங்கியுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

இப்பாடத்தில் பின்வரும் அலகுகள் காணப்படுகின்றன.

1.உயிர் முறைமைகள் தொழிநுட்பத்தின் அறிமுகம்
2.நீரியியலும் காலநிலையியலும்
3.மண்ணும் நீரும்
4.அளவையும் மட்டப்படுத்தலும்
5.தாவர இனப்பெருக்கத்தொழிநுட்பம்
6.உணவுப்பாதுகாப்பும் சட்டவரையறைகளும்
7.அறுவடைக்குப்பிந்திய தொழில்நுட்பம்
8.உணவுகளைப்பொதியிடலும் பெயர்ச்சுட்டியிடலும்
9.உணவுச்சேர்மானங்கள்
19அடிப்படை இலத்திரனியல்
11.நீரின் தரம்
12.நீருயர்த்தல்
13.நீர்ப்பாசனத்தொழில்நுட்பம்
14.பீடை முகாமைத்துவம்
15.செயற்றிட்டங்கள்
16.கால்நடைவளர்ப்பு
17.உணவு நற்காப்புத் தொழிநுட்பம்
18.பண்ணைக்கட்டமைப்புகள்
19.ஆளுகை நிபந்தனைகளின் கீழான பயிர்ச்செய்கை
20.மலர்ச்செய்கையும் தரையலங்கரிப்பும்
21.பண்ணைப்பொறிமுறைப்படுத்துகை
22.மீன்பிடியும் நீருயிரின வளர்ப்பும்
23.காடுகளும் வன உற்பத்திகளும்
24.தொழில்சார் சுகாதாரமும் பாதுகாப்பும்
25.முயற்சியாண்மை

இவ் அலகுகளை நோக்கும் போது கணித விடங்கள் மிகக்குறைவாக இருப்பதுடன் கோட்பாடு சார்ந்த எண்ணக்கருக்களே கூடிய அளவு உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனவே விடயங்களை புரிந்து மனனம் செய்யும் அறிவைக்கொண்ட மாணவர்கள் கூடிய அளவிற்கு இப்பாடத்தினைத் தெரிவுசெய்யலாம்.

மூன்றாவது பாடமாக இத்துறைக்கு தெரிவு செய்யப்படும் பாடம் ஏற்கனவே க.பொ.த உயர்தரத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடங்களாகும். முன் தரப்பட்டுள்ள இப் பத்துப்பாடல்களில் ஒன்றினைத் தெரிவு செய்யலாம். எனவே இவற்றில் எப்பாடத்தைத் தெரியலாம் என்பதை சக மாணவர்கள்,ஆசிரியர்கள்,பெற்றோர்களுடன் ஆலோசிக்கவும்.

### தொழில்நுட்பத்துறையின் நோக்கங்கள்

நாளாந்த வாழ்விற்குப்பயன்படத்தக்க வகையில் மாணவர்களை தொழில்நுட்பத்திறன்கள் கொண்டோராக ஆயத்தம் செய்தல்.


பிரச்சினைகளுக்குத் தொழில்நுட்பரீதியான தீர்வுகளை விருத்தி செய்வதற்காக திறன்களை மேம்படுத்துதல்.

மேலதிக தொழிற்தகைமையை வழங்குதல்.

N.V.Q சட்டகத்தின் அடிப்படையில் மாணவர்களை அவர்களின் தொழில்சார் கல்வியைத்தொடர இயலுமானவர்களாக்குதல். என்பனவே தொழில்நுட்பத்துறையின் நோக்கங்களாக தேசியகல்வி நிறுவனத்தின் தொழில்நுட்பத்துறை அறிவித்துள்ளது. மாணவர்கள் தமது இருவருடகால கற்கைகளை முடித்து பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்க இருக்கும் புதிய கற்கைநெறிகளுக்கு செல்வதுடன் அவ்வாறு செல்ல முடியாதவர்கள் பல்வேறு வகையான தொழில்சார் பயிற்சி நெறிகளைத் தொடர்வதன் ஊடாக வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதுடன் தமது எதிர்காலத்தையும் மேம்படுத்த உதவும்.

29. பொருள் ஒன்றின் விலை குறியீட்டு வடிவில் KMV.MP எனக் குறிக்கப்பட்டிருந்தது. பொருளின் விலையை குறிக்கும் விடையைத் தெரிவு செய்க

1) 435.00  2) 638.75  3) 352.50

30. 
இவ்வுபகரணம் எத்தொழிலுடன் தொடர்புடையது.

1) விவசாயம்  2) மட்பாண்டம்  3) மீன்பிடி

31. 
பொது இடங்களில் காணப்படும் சில குறியீடுகள் குறிக்கும் கருத்தை தெரிக.

1) ஆண்கள் மட்டும்  2) பெண்கள் மட்டும்  3) பாதசாரிக்கடவை

32. 
1) இங்கேபுகைக்கலாம்
2) புகைத்தல் உடல் நலத்துக்கு தீங்கு
3) புகைத்தல் தடை

33. 
1) சிற்றுண்டிச்சாலை
2) பீங்கான் தொழிற்சாலை
3) கரண்டிகள் விற்குமிடம்

தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் கருத்துள்ள வாக்கியத்தை அமைக்க முடியும். அவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்ட விடையின் கீழ் கோடிடுக.

A - வாழவே  B - மிருகங்கள்  C - விரும்புகின்றன  D - சுதந்திரமாக

1) D,B,C,A  2) B,D,A,C  3) B,C, A,D

35. A - படுத்திருக்கும்  B - போலக்  C - சிகிரியா  D - சிங்கம்  E - காட்சிதரும்

1) B,C,A,E,D  2) C,E,A,D,B  3) C,A,D,B,E

**36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

36. இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெறவுள்ளன? ..........................

37. நான் விளையாடிய விளையாட்டில் ஒரு அணியில் 6 பேர் விளையாடுவர். இலங்கையின் தேசிய விளையாட்டாகிய இவ்விளையாட்டின் பெயர் யாது? ..........................

38. கட்டத்தில் உள்ள இரட்டை எண்கள் எத்தனை? ..........................

| | | | |
|---|---|---|---|
| 3 | 9 | 1 | 2 |
| | | 6 | |
| 5 | 8 | 4 | 7 |

39. கட்டத்தில் உள்ள ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை யாது?

40. புள்ளிக்கோட்டில் வரவேண்டிய எண்ணை எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 36 | 31 | 27 | 24 | ........ |



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I


1 மணி 30 நிமிடம்


# கல்வி முரசு

தமிழ்


ஆசிரியர்:- A.K.S. நிஸானா ஹில்மி


**முதலில் தரப்பட்ட உருவை ஒத்த உருவைத் தெரிந்து கோடிடுக.**

1) 
(1) (2) (3)

2) 
(1) (2) (3)

**3 ஆம் 4 ஆம் வினாக்களில் அடுத்துவரும் உருவைத் தெரிந்து கோடிடுக.**

3) 


4) 


**புள்ளிக்கோட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து கோடிடுக.**

5. அவர்கள் எங்களை தம்மை நோக்கி வருமாறு .......................
1) அழைத்தார்கள்  2) அழைத்தீர்கள்  3) அழைத்தோம்

6. .......................... ஓவியங்களை ஒத்த ஓவியங்கள் இலங்கையிலும் உள்ளன.
1) சிகிரியா  2) அஜந்தா  3) மோனலிசா

7. இன்று உலகின் .......................... எங்கும் கணனியின் ஆதிக்கமே
1) மேடுபள்ளம்  2) மூலைமுடுக்கு  3) காடுமேடு

8. பிழையான கருத்து இடம்பெறும் விடையின் கீழ் கோடிடுக.
1) காலையில் தாமரை மலர்கள் மலர்ந்தன.
2) தினமும் சூரியன் கிழக்கு வானில் உதிக்கும்.
3) காகம் ஓர் தாவர உண்ணி

9. 1) பூக்கள் யாவும் காய்களை உருவாக்குகின்றன.
2) இலங்கையின் நீளமான நதி மகாவலி கங்கை
3) இலங்கை ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.




**தரப்பட்ட தொடர்பை அவதானித்து அதற்கேற்ப தொடர்புள்ள விடையின் கீழ் கோடிடுக.**

10. பானை - மண்
1) கதிரை - தளபாடம் 2) செருப்பு - இறப்பர் 3) பேருந்து - டீசல்



11. நான் - தன்மை ஒருமை
1) நீங்கள் - படர்க்கை பன்மை
2) அவன் - படர்க்கை பன்மை
3) நீ - முன்னிலை ஒருமை

**மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**


12. எட்டு உச்சிகளையும் ஆறுமுகங்களையும் உடைய திண்ம உருவைத் தெரிக.

1)  2)  3) 

13. மூன்றுக்கு பத்து நிமிடம் என்பதை காட்டும் கடிகார முகத்தைத் தெரிக.

1)  2)  3) 

14. 1 kg 500g சீனியை 250g கொண்ட எத்தனை பைக்கற்றுக்களில் அடைக்கலாம்.
1) 10 2) 6 3) 4

15. 
உருவில் உள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 16 2) 27 3) 30

16. மடக்கேறும் அரவும் என்னும் உயிர்க்குறியைக் கொண்ட சொல் எது?
1) சூரியன் 2) கொம்பு 3) நூலகம்

17. வானம் மீதெழுவேன் - அங்கே
வட்டம் சுற்றிடுவேன்
கான மலையெல்லாம் - யானோர்
கணத்தில் தாண்டிடுவேன்.

இப்பாடல் யார் பாடுவதாக உள்ளது.
1) ஓர் விமானம்
2) ஓர் பட்டம்
3) ஓர் பறவை

18. "நாளை மறுநாள் கொழும்புக்கு வருவேன்" என விமல் நேற்றுக் கூறினான். அதன்படி விமல் கொழும்புக்கு செல்வது.
1) இன்று 2) நாளை 3) நேற்று

19. சமுத்திரத்தில் எப்பொழுதும் காணக்கூடியது.
1) கப்பல், மீன், மீனவன்
2) படகு, கரை, மீன்
3) கரை, நீர், மீன்



20. $$\begin{array}{r} 548 \\ +\,31A \\ \hline 8B2 \end{array}$$
A, B என்பவை குறிப்பவை முறையே
1) 4, 6 2) 6, 3 3) 4, 5

**A,B, C, D ஆகிய கட்டங்களில் தரப்பட்டுள்ள சொற்களை அவதானியுங்கள். அதற்கேற்ப தரப்பட்ட வினாக்களுக்குரிய விடையைத் தெரிந்து கோடிடுக.**


| A | B | C | E |
|---|---|---|---|
| நாய்<br>சருகுமான்<br>கழுகு<br>காகம் | தேனி<br>தும்பி<br>வண்ணாத்துப்பூச்சி<br>வீட்டு ஈ | கொக்கு<br>முதலை<br>கிவி<br>பல்லி | பூனை<br>கோழி<br>ஆமை<br>சிங்கம் |

21. ஆறு கால் பிராணிகள் மட்டும் அடங்கிய அடைப்பை தெரிக.
1) A 2) B 3) C

22. அனைத்தும் உண்ணிகள் இரண்டு வீதம் அடங்கிய அடைப்பைத் தெரிவு செய்க.
1) A உம் , D உம் 2) B உம், C உம் 3) A உம் , C உம்


23. முட்டையிட்டு இனம் பெருக்கும் பிராணிகள் உள்ள அடைப்புக்கள் எவை?
1) B உம், D உம் 2) D உம், C உம் 3) B உம், C உம்

**கீழே தரப்பட்ட கணித செய்கையின் படி 24 ஆம் 25 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




24.  இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 9 2) 13 3) 11

25.  இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 6 2) 7 3) 10

26. 

கம்பித்துண்டு ஒன்றைப் பயன்படுத்தி செய்யப்பட்ட முக்கோணியை உரு காட்டுகிறது. இந்த கம்பித்துண்டைப் பயன்படுத்தி செய்யப்பட்ட சதுரத்தின் ஒரு பக்க நீளம் யாது?
1) 8 cm 2) 6 cm 3) 5 cm




வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய கணிதச் செய்கைக் குறியீடுகள் எவை?

27.

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | | 4 | = | 7 |
| 15 | | 5 | = | 10 |
| 15 | | 3 | = | 5 |

1) + − ÷ 2) + − × 3) + × ÷




28. கோயிலில் மங்கள வாத்தியமாக இசைக்கப்படும் இசைக்கருவியைத் தெரிக.

1)  2)  3) 




# நிகழ்வுகளின் பதிவுகள்....



நல்லூர் பிரதேச சபையால் நடாத்தப்பட்ட முக ஒப்பனை மற்றும் கேக் ஐசிங் பயிற்சி பெற்ற 3ஆம் பிரிவினருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தின் போது...

நல்லூர் பாலகதிர்காம ஆடிவேல் வீதியுலா அண்மையில் இடம் பெற்றபோது... (137)




வேலணை பிரதேச செயலக அரச ஊழியர்கள் வேலணை பிரதேச சபையில் இரத்ததானம் வழங்குவதைக் காணலாம். (21)

காரைநகர் அரசடிக்காடு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த தேர் உற்சவத்தின் பதிவுகள்... (50)




மேத்தா நிறுவனத்தின் ஏற்பாட்டில் வன்னியில் இடம்பெற்ற மாற்றுவலுவுடையோருக்கான நடமாடும் சேவையின் பதிவுகள்... (137)

# இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் எகிப்தில் 100 பொதுமக்கள் பலி



எகிப்தில் பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி மொஹமட் மோர்ஸியின் ஆதரவாளர்கள் தலைநகர் கெய்ரோவில் நடத்திய எதிர்ப்பு போராட்டத்தின் போது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 100 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

1000 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளதாக போராட்டம் நடந்துவரும் ரபா அல் அதாவியா பள்ளிவாசலுக்கு அருகே உள்ள தற்காலிக வைத்தியசாலையிலிருந்து மருத்துவர் ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் 20 பேர் வரையிலேயே கொல்லப்பட்டுள்ளதாகவும் 177 பேர் காயமடைந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு கூறியுள்ளது. தலைநகரின் வீதிகளில் மோர்ஸின் ஆதரவாளர்களும் எதிர்ப்பாளர்களும் நேற்றிரவு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர்.

இந்த மாதத்தின் முற்பகுதியில் ஜனாதிபதி மோர்ஸியை பதவி கவிழ்த்த இராணுவத்துக்கு ஆதரவானவர்கள் தாஹ்ரிர் சதுக்கத்தில் கூடியுள்ளனர். இந்த விவகாரத்தில் தலையிடுவதற்கு இராணுவத்துக்கு ஆணை வழங்குவதற்காக மக்களை வீதிகளில் இறங்கி போராடுமாறு இராணுவத் தளபதி ஜெனலர் அப்தல் ஃபாட்டா அல் சிஸி கோரியிருந்தார்.

இதேவேளை, பல்லாயிரக் கணக்கான மோர்ஸி ஆதரவாளர்கள் ரபா அல் அதாவியா பள்ளிவாசலை அண்டிய பகுதிகளில் போராட்டம் நடாத்தி வருகின்றனர். இவர்கள் பள்ளிவாசல் வளாகத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று உள்துறை அமைச்சர் சூளுரைத்திருந்தார்.

மக்கள் மீது வேண்டுமென்றே இராணுவத்தினர் சரமாரியாகத் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாக முஸ்லிம் சகோதரத்துவக்கட்சியினர் கூறுகின்றனர்.













# இந்திய தலைப்பாகை அணிந்து மக்களை மகிழ்வித்த பாப்பரசர்



பிரேசில் தலைநகர் ரியோ டி ஜெனிரோ நகரில் உலக இளைஞர்தின விழா நடைபெற்று வருகிறது.

இந்த விழாவிற்கு தலைமை தாங்குவதற்காக பாப்பரசர் பிரான்சிஸ் வாட்டிகன் நகரில் இருந்து ரியோ டி ஜெனிரோ விற்கு விஜயம் செய்துள்ளார்.

பிரேசிலில் வாழும் அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், கலைஞர்கள் இடையே நேற்று முன்தினம் அவர் சொற்பொழிவு ஆற்றினார். சொற்பொழிவுக்கு பின்னர் பாப்பரசர் பிரான்சிஸ் மேடையின் மீது பல்வேறு தரப்பினரையும் அழைத்து வாழ்த்தினார்.

பாப்பரசரிடம் வாழ்த்துப் பெற சில இந்தியர்களும் மேடையேறினர். அப்போது வெறும் உடம்புடன் பாசிமாலைகளை அணிந்து, காது மற்றும் மூக்கில் பழங்கால அணிகலன்களை அணிந்து வந்த ஒருவர் தனது தலைப்பாகையை பாப்பரசரிடம் அளித்து அதை அணிந்துக்கொள்ளும்படி வேண்டினார். சற்றும் தாமதிக்காமல் அந்த தலைப்பாகையை அணிந்தபடி மக்களை நோக்கி பாப்பரசர் உற்சாகமாக கையசைத்தார். பாப்பரசரின் எளிமையை அங்கு கூடியிருந்த மக்கள் நெகிழ்ச்சியுடன் பாராட்டினர்.

# நடிகை கனகாவுக்கு புற்றுநோய்ச் சிகிச்சை



கேரளாவில் நடிகை கனகா புற்றுநோய்க்கு சிகிச்சை பெறும் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முன்னாள் நடிகை தேவிகாவின் மகள் கனகா நடித்த கரகாட்டக்காரன் படம் சூபபர் ஹிட்டானது.

இதனையடுத்து ரஜினி, பிரபு, கார்த்திக் என முன்னணி நடிகர்களுடன் வலம் வந்த வரை, 1990 ஆண்டுகளின் இறுதியில் இருந்து பார்க்க முடியவில்லை. திருமணம் செய்து கொள்ளாத கனகா, 2000 ஆம் ஆண்டில் தனது தாய் இறந்த பிறகு யாரும் இல்லாமல் தனியாக வாழ்ந்து வருகிறார்.

இந்நிலையில் அவர் உடல் நலக் குறைவால் அவதிப்படுவதாக அவ்வப்போது தகவல்கள் வெளியாகி வருகின்றன. மேலும் அவர் கேரளாவில் ஆழப்புழாவில் புற்றுநோய்க்காக சிகிச்சை பெறும் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொள்வதாகவும தகவல்கள் வெளியாகியுள்ளன.

# லிபியச் சிறையிலிருந்து 1000 கைதிகள் தப்பியோட்டம்

(லிபியா)

லிபியா தலைநகர் திரிபோலி அருகே இருக்கும் சிறைச்சாலையிலிருந்து 1000 இற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பி ஓடி விட்டதாக சிறை அதிகாரி தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கட்சி அலுவலங்களுக்கு எதிராக லிபிய பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது கோய்பியா சிறைச்சாலையையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர். இந்நிலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பி ஓடிவிட்டனர். தப்பியோடிய கைதிகளில் பெரும்பாலானோர்கள் கொடுஞ்செயல் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் ஆவர. இவர்களைக் கண்டுபிடிக்க பொலிஸார் தீவிர வேட்டை நடத்தி வருகின்றனர்.

# கைதிகளை விடுவிக்க இஸ்ரேல் இணக்கம்

பாலஸ்தீன - இஸ்ரேல் நாடுகளிடையே நடந்துவந்த சமாதான பேச்சுவார்த்தையில் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து முட்டுக் கட்டை ஏற்பட்டுள்ளது.

இந்த முட்டுக்கட்டையை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றால் 20 ஆண்டுகளுக்கு மேலாக இஸ்ரேல் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் விடுதலை செய்யவேண்டும் எனப் பாலஸ்தீனிய அதிபர் முஹம்மது அப்பாஸ் கூறியிருந்தார். இதனை ஏற்று, சமாதான பேச்சுவார்த்தை மீண்டும் தொடருவதற்கான துவக்கமாக 104 கைதிகளை விடுதலை செய்வதாக இஸ்ரேல் பிரதமர் பின்யமின் நேதன்யாகு அறிவித்துள்ளார். தனது “பேஸ் புக்” பக்கத்தில் இந்த அறிவிப்பை வெளியிட்ட அவர், “நாட்டின் நலன் கருதி, பொது கருத்துக்கு எதிராக தான் இதைப்போன்ற முடிவுகளை பிரதமர்கள் எடுக்க வேண்டியுள்ளது” எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புகலிடதாரிகளின் படகு விபத்து; இந்தோனேஷிய பிரஜைகள் கைது

இலங்கையர் உட்பட சட்ட விரோத புகலிடக் கோரிக்கையாளர்களுடன் இந்தோனேஷியாவிலிருந்து அவுஸ்ரேலியாவிற்கு புறப்பட்டுச் சென்ற படகு விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் இந்தோனேஷியாவைச் சேர்ந்த நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையர் உட்பட சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களுடன் இந்தோனேஷியாவிலிருந்து அவுஸ்ரேலியாவிற்குப் புறப்பட்டுச் சென்ற படகு இம்மாதம் 23 ஆம் திகதியன்று ஜாவாத் தீவு கடற்பரப்பில் வைத்து விபத்துக்குள்ளானதில் இலங்கையர்கள் உட்பட 15 பேர் பலியாகினர்.

6 குழந்தைகள், ஒரு கர்ப்பிணிப் பெண் உள்ளிட்ட 15 அகதிகளே உயிரிழந்தனர். இதில் இரு பெண்களும் குழந்தை ஒன்றும் இலங்கையர்கள் எனத்தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வந்த இந்தோனேஷியப் பொலிஸார் கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் இந்தோனேஷியாவைச் சேர்ந்த நான்கு நபர்களை வெவ்வேறு நகரங்களில் வைத்து கைது செய்துள்ளனர்.

இவ் விபத்தின் போது 200 பேர் வரை படகில் இருந்ததாக பொலிஸார் அறிவித்த போதும் படகில் 250 பேர் இருந்ததாக புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கூட்டுறவு தின விழா ஊர்காவற்றுறையில்

(ஊர்காவற்றுறை)

91 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு தின விழா இன்று காலை 10 மணிக்கு சங்கத்தலைவர் சி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிழ்வில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடந்த மாணவர்கள் மற்றும் சங்க ஊழியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (65)

# இறம்பைக்குளம் பிரதான வீதியின் அவலம் குறித்து மக்கள் கவலை



(வவுனியா)

நெடுங்கேணி கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திலிருந்து இறம்பைக்குளம் செல்லும் பிரதான வீதி குண்டும் குழியுமாக சேதமடைந் துள்ளது.

இந்த ஆலய வீதி கடந்த ஆண்டு பருவப்பெயர்ச்சி மழையினால் அரிக்கப்பட்டு குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனை இறம்பைக்குளம் கிராம அமைப்புக்கள் பல தடவை முறையிட்டபோதிலும் அரச அதிகாரிகள் எந்தவித கவனமும் எடுக்கவில்லை. இதனைக் கண்டும் காணாமலும் இருப்பதாக கிராம அமைப்புக்களும் மக்களும் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# கரவெட்டியில் இரு வீதிகள் விரைவில் புனர் நிர்மாணம்

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேசத்தில் நீண்டகாலமாக திருத்தப்படாத 2 வீதிகள் 78 மில்லியன் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

கரணவாய் குஞ்சர் கடை சந்தியிலிருந்து மண்டான் செல்லும் வீதியும், கரவெட்டி வடக்கு அரசடிச்சந்தியில் இருந்து சோனப்பு வரை செல்லும் வீதியும் திருத்தியமைக்கப்படவுள்ளன.

தலா 2 மைல் நீளமான இவ் வீதிகளை திருத்தி கிராமிய மக்களின் போக்கு வரத்துக்கு உதவுமாறு நெல்லியடி வர்த்தக சங்கத்தலைவர் எஸ்.அகிலதாஸ் விடுத்த கோரிக்கையை அடுத்து வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி 78 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். (109)

# தெல்லிப்பழையில் குளவித் தாக்குதல்; நால்வர் அவசர சிகிச்சைப் பிரிவில்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மாத்தனை பகுதியில் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தவர்கள் மீது குளவிகள் தாக்கியுள்ளன.

குளவித் தாக்குதலுக்கு இலக்கான பத்துக்கும் மேற்பட்டவர்கள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் நால்வர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சின்னத்தம்பி செல்வேந்திரா (வயது - 55), கந்தசாமி கமல்ராஜ் (வயது - 37), செல்வராசா கமலக்கண்ணன் (வயது - 44) சங்கரப்பிள்ளை சசிகரன் (வயது - 28) ஆகியவர்களே அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# சுய விமர்சனங்களை அரசு மேற்கொள்ளும் காலம் உதயம்



அரசாங்கத்திற்கு சுய விமர்சனங்களை மேற்கொள்ள வேண்டிய காலம் உதயமாகியிருப்பதாக நீர்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அநுராதபுரம் - மஹாவிலச்சிய குளத்தை புனரமைப்பு செய்வது தொடர்பான நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தினுள் பல்வேறு துறைகளில் பலவீனம் காணப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

குறிப்பாக விவசாயத் துறையில் பல வித பிரச்சினைகள் இருப்பதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் நெற்பயிர் விதைப்பது தொடர்பிலும் விவசாயிகளுக்கு நிபந்தனைகள் விதிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வனாந்தரங்கள், சரணாலயங்களில் நீர்த்தேக்கங்களை அமைப்பதன் ஊடாக காட்டு யானைகள் கிராமங்களுக்குள் வருவதை தற்காலிகமாக நிறுத்த முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வன பாதுகாப்பு அமைச்சு அதற்கு தயாராக இருக்க வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## பல்வேறு...

போன்று வவுனியா மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தன் தலைமையிலும், மன்னார் மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலும், கிளிநொச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தலைமையிலும் முல்லைத்தீவில் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தலைமையிலும் வேட்புமனுத்தாக்கல் செய்யப்படும்.

நேற்று இரவுடன் வேட்புமனு கையொப்பம் இடும் பணிகள் நிறைவடைந்து இன்று தாக்கல் செய்யப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த இறுதிக்கட்டப் பணிகளின் போது முதன்மைவேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிறிதரன், மாவைசேனாதிராஜா, சிவசக்தி ஆனந்தன், தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர் ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கெண்டனர். (இ)

## வேட்பாளர்...

மரத்தில் தொங்குவாலா எங்களுக்கே சவாலா" "இந்தப் படை போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா" போன்ற கோசங் களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் நீண்ட நேரம் வீதி மறியல் செய்யப்பட்டதால் ஏ-9 வீதி போக்குவரத்தில் நெருக்கடி ஏற்பட்டது. எனினும் பகல் ஒருமணியுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கலைந்து சென்றனர். (105,இ,25)

## இலங்கை...

அரசிடம் வெளிப்படுத்த நாம் தயக்கம் காட்டக்கூடாது. பா.ஜ.க. மீண்டும் மத்தியில் ஆட்சி அமைத்தால் இவற்றை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

இலங்கையின் சமூக, அரசியல் - பொருளாதார, அமைப்பில், தமிழர்களுக்கு முன்னுரிமை தரும் புதிய வழிமுறையை இலங்கை அரசு ஏற்படுத்தித்தரவேண்டும்.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு சிறப்பு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். தமிழர்களுக்கான பாதுகாப்பை இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## இலங்கை...

இதேவேளை யாழ். மாவட்டத்தினைப் பிரதிநிதிப்படுத்தி சி.வி.விக்னேஸ்வரன் முதன்மை வேட்பாளராகவும், சி.வி.கே.சிவஞானம், பாலச்சந்திரன் கஜதீபன், சிவயோகம், ஆர்னோல்ட், சுஜந்தன், பரம்சோதி, திருமதி ஆனந்தி, க.சுகிர்தன், சிவாஜிலிங்கம், விந்தன் கனகரத்தினம், குகமாஸ், சித்தார்த்தன், தர்மலிங்கம், தம்பிராசா, ஐங்கரநேசன், சர்வேஸ்வரன், ஜெயசேகரம், சுப்பிரமணியம் ஆகியோர் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களாக கையொப்பமிட்டு இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ்.செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்யப்படும் என்று தமிழரசுக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ,25)

## வவுனியா...

சேனாதிராஜா, முகுந்தரதன், கோபிநாத், சுதாகரன் ஆகியோரில் யாரை நியமிப்பது என்பது தொடர்பில் இழுபறி தொடர்கிறது.

இந் நிலையில் வவுனியா நகரசபை உப தலைவர் முகுந்தரதனை நியமிக்க வேண்டாம் என வவுனியா மாவட்ட புத்திஜீவிகளும் சிரேஷ்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர்களும் கோரிய நிலையில், அதனை பொருட்படுத்தாத தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.சுமந்திரன், மற்றும் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஆகியோர் முகுந்தரதனை வேட்பாளராக நியமிக்க முனைந்து வருவதனால், தாம் பழைய உறுப்பினராக இருந்தும் தமது சொல்லுக்கு மதிப்பளியாது நகரசபையில் இடம்பெற்ற மோசடிகளுக்கும் குழப்பங்களுக்கும் உதவிய முகுந்தரதனை எவ்வாறு வேட்பாளராக நியமிக்க முடியும் என அதிருப்தியடைந்து பல சிரேஷ்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் கட்சியில் இருந்து வெளியேறுவதற்கு முடிவெடுத்துள்ளதாக அறிய முடிகின்றது.

இதேவேளை, வைத்திய கலாநிதி சத்தியலிங்கமும் ரதனின் தெரிவுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும், ரதன் நியமிக்கப்படும் பட்சத்தில் அவரும் வெளியேறலாம் என தெரிவிக்கப்படுவதுடன் வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் நியமனத்திற்கு எதிராக துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளதுடன் சுயேட்சை குழு ஒன்றும் போட்டியிடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில், தனக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் தராது விடின் தான் இறக்கப் போவதாக வவுனியா நகரசபை உப தலைவர் முகுந்தரதன் தனது கட்சிக்கு தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 23 வருடம்...


டுள்ளது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக றெக்கமளேஷன் வீதி என அழைக்கப்பட்ட குறித்த வீதியை மூடி படைத்தரப்பினர் முகாமிட்டதை தொடர்ந்து குறித்த வீதியூடாக மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதநிலை இருந்தது.

இந்நிலையில் குறித்த வீதியை தமது பாவனைக்காக திறந்து விடுமாறு அப்பகுதி மக்கள் அமைச்சரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சு மற்றும் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி ஆகியோருடன் கலந்துரையாடியதன் பயனாக குறித்த வீதி 23 ஆண்டுகளுக்கு பின்னர் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

இதனையடுத்து இவ்வீதியூடாக இன்று அல்லது நாளை முதல் மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ளும் வகையில் வீதியிலுள்ள தடைகளை அகற்று மாறு அமைச்சர் படைத்தரப்பினரிடம் கேட்டுக்கொண்டார்.

இதனிடையே குறித்த பாதையை தமது பாவனைக் காக திறந்து வைக்க வழிவகை செய்த அமைச்சருக்கு அப்பகுதி மக்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

# யாழ்.செயலகம் முன்பாக இளைஞர் தீக்குளிக்க முயற்சி



சுதந்திரக்கட்சிக்கு எதிராக யாழ்.செயலகத்திற்கு முன்னால் முஸ்லிம்கள் மேற்கொண்ட மறியல் போராட்டத்தின் போது இளைஞர் ஒருவர் தீக்குளிக்க முயற்சித்துள்ளார்.

வடமாகாண சபைத் தேர்தலில் சுதந்திரக்கட்சி சார்பாக போட்டியிடுவதற்கு விண்ணப்பித்த எம்.எம்.சிராஸ் என்பவர் வேட்பாளர் பட்டியலில் இடம் பெறாததையடுத்தே இந்த மறியல் போராட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களில் இளைஞர் ஒருவர் "சிராஸ் அண்ணனை வேட்பாளர் பட்டியலில் இணைத்துக்கொள்ளா விட்டால் தீக்குளிப்பேன்" என்று சொல்லி அருகில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தில் இருந்த மண்ணெண்ணெய்யை எடுத்து தனது உடலில் ஊற்ற முற்பட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற இளைஞர்கள் சிலர் தீக்குளிக்க முயற்சித்த இளைஞனிடம் இருந்து மண்ணெண்ணெய் கானை பறித்தெடுத்துள்ளனர்.

குறித்த இளைஞனே இந்த மறியல் போராட்டத்தை முன்னின்று நடத்தியுள்ளதுடன், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாமல் முன்னெடுக்குமாறு பொலிஸார் தெரிவித்த போதும் குறித்த இளைஞன் பொருட் படுத்தாமல் பொலிஸாருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த யாழ். பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி சமன் சிகேரா குறித்த இளைஞனைக் கைது செய்து சக பொலிஸாரிடம் ஒப்படைத்த போதிலும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சில இளைஞர்களின் எதிர்ப்பை அடுத்து பொலிஸார அவ் விளைஞனை விடுவித்துள்ளனர். (25)

# தொடர் இந்தியாவசம்



(ஹராரே)

சிம்பாப்வே அணியுடன் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியில் 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்ற இந்திய அணி ஒரு நாள்தொடரைக் கைப்பற்றிக் கொண்டது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் வீராட் ஹோலி, சிம்பாப்வே அணியை முதலில் துடுப்பாட அழைத்தார்.

தொடக்க வீரர்களாக சிம்பாப்வேயின் சிபாண்டா, சிகந்தர் ரஸா களம் இறங்கினார்கள். சிபாண்டர ரன் ஏதும் எடுக்காமல் வினய் குமார் பந்தில் ஆட்டம் இழந்தார். ரஸா 1 ரன்னில் முகமது சமி பந்தில் அவுட் ஆனார்.

அதன்பின் வந்தவர்கள் தொடர்ச்சியாக அவுட் ஆக சிம்பாப்வே 46 ஓவரில் 183 ரன் எடுப்பதற்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது அந்த அணியின் வில்லியம்ஸ் அதிகபட்சமாக 45 ரன் எடுத்தார். இந்தியா தரப்பில் மிஸ்ரா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

184 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியாவின் தொடக்க ஆட்டக்காரர்களாக ஷர்மா மற்றும் தவான் களம் இறங்கினார்கள். இருவரும் சிறப்பான தொடக்கத்தை கொண்டு வந்த நிலையில் ஷர்மா 14 ரன்னில் அவுட் ஆனார். அதன்பின் தவானுடன் ஜோடி சேர ஹோலி களம் இறங்கினார்.

சிறப்பாக விளையாடி வந்த தவான் 32 பந்தில் 35 ரன் எடுத்து அவுட் ஆனார். அடுத்து ஹோலியுடன் ஜோடி சேர்ந்த ராயுடு 33 ரன்னில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து ஹோலியுடன் ரெய்னா ஜோடி சேர்ந்தார். இறுதியில் இந்திய அணி 35.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 187 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

ஹோலி அதிரடியாக விளையாடி 68, ரெய்னா 28 ரன்னிலும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருது மிர் ஷாவுக்கு வழங்கப்பட்டது.

### மாட்டு வண்டிச் சவாரிப்போட்டியில் அனர்த்தம்

# விளம்பர கம்பத்துடன் மோதி மாடு கவிழ்ந்து சாரதி படுகாயம்

(வேலணை)

சரவணை நாகபூசணி அம்மன் விளையாட்டுத்திடலில் நேற்றையதினம் இடம்பெற்ற மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டியில் மாட்டு வண்டி ஒன்று திடலின்முடிவில் நாட்டப்பட்டிருந்த விளம்பர கம்பத்துடன்மோதுண்டு தலைகீழாக புரண்டதையடுத்து வண்டில்சவாரி செய்த சாரதி பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

மன்னார், விசுவமடு, மற்றும் யாழ். குடாநாட்டில் இருந்து இருநூறுக்குமேற்பட்ட காளை மாடுகள் இந்த வண்டிச்சவாரிப் போட்டியில் பங்கெடுத்திருந்தன பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு பாரம்பரியமாட்டுவண்டி சவாரிப்போட்டிகளைக் கண்டு கழித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவே ஆட்சி அமைப்பதற்கு உதவும்

## என்கிறது நவசிஹல உறுமய

எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படாத சந்தர்ப் பத்தில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அமைக்கவோ அல்லது அரசாங்கத்தைக் கவிழ்க்கவோ ஒருபோதும் முடியாதென நவ சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் சரத் மனமேந்திர தெரிவித்தார்.

எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பு இயக்கத்தினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆளும் கட்சியில் இருந்து பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளதாகவும் அரசாங்கம் அவர்களுக்கு கொடுக்கும் அழுத்தங்களின் காரணமாகவுமே அவர்கள் மறுப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி கூறி வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இக் கருத்தானது முற்றிலும் பொய்யானது. ஐக்கிய தேசியக் கட்சியில் எவ்விதமான நிரந்தர கொள்கை இல்லாமையும் அரசாங்கத்தை எதிர்க்கும் தன்மை இல்லாமையுமே அவர்கள் இணையாமைக்கான முக்கிய காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திருடப்படும் பூசணிக்காய்கள்

இணுவில் வயல் வெளிகளில் விவசாயவிளைபொருட்கள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள்கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் இணுவில் தோட்ட வெளியொன்றில் நன்கு முற்றிய பூசணிக்காய் இரவு வேளை திருடியது மட்டுமல்லாமல் இரண்டு சில்லு உழவு இயந்திரத்தில் அவற்றை ஏற்றிச் சென்ற துணிகரச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. இது மட்டுமல்லாமல் அப்பகுதியில் உள்ள கிணறுகளில் பொருத்தப்பட்டிருந்த நீர்க்குழாய்களும் திருடப் பட்டுள்ளன. சிலவற்றை வெட்டி எடுத்துச் சென்றுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இரவு வேளைகளிலும் இனி நாம் தோட்டங்களிலேயே தங்கவேண்டிய நிலை காணப்படுவதாகவும் விவசாயிகள் பலரும் கவலை தெரிவித்தனர். வெயில், மழை பாராது கஷ்டப்பட்டு உழைப்பதால் எந்தப் பயனும் இல்லை என அவர்கள்மேலும் தெரிவித்தனர்.

# யாழ். போதனாவில் நெடுந்தீவுச் சடலம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் கரையொதுங்கிய சடலம் ஒன்று பொலிஸாரினால் யாழ். போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை நெடுந்தீவுப் பொலிஸாரினால் இந்த கரையொதுங்கிய சடலம் பிரேத அறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இனம் காணப்படாத ஆணின் சடலம் ஒன்றே இவ்வாறு நெடுந்தீவுப் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீண்டநாட்களாகநீரில் கிடந்து பழுதடைந்த நிலையிலேயே இச்சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரதேச அறையில் வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

# தொடரைக் கைப்பற்றியது இலங்கை



இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுதொடரைக் கைப்பற்றியது.

பல்லேகல மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 48.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக டுமினி 97, அம்லா 77 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் மெண்டிஸ்4, மலிங்க3, டில்சான் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இந்நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 44 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் டில்சான்115, சங்கக்கார 91 ஓட்டங்களைப் பெற்றனர்.

அத்துடன் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் டீ.எம்.டில்சான் தனது 17ஆவது சதத்தை பூர்த்தி செய்துள்ளார்.

ஐந்து ஒரு நாள் போட்டிகளைக் கொண்ட தொடரை இலங்கை அணி மூன்றுக்கு ஒன்று என்ற நிலையில் கைப்பற்றியுள்ளது. ஆட்டநாயகனாக டில்சான் தெரிவானார்.

# தயாசிறிக்கு எதிராக வழக்கு தொடரும் ஹரின்

அரசாங்கத்திற்கு கட்சி தாவியது மட்டுமன்றி ஐ.தே.க.வை அவதூறாகப் பேசியமை குறித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோதெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இந்த நிலைப்பாட்டை வெளியிட்டார்.

அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்காக தயாசிறி ஜயசேகரவுக்கு 25 கோடி ரூபா பெற்றுக் கொண்டமையை தாம் ஆதாரத்துடனேயே கூறியதாக அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற வரப்பிரசாதங்களுக்கு அமையவே தயாசிறி தொடர்பில் குற்றச்சாட்டு வெளியிடப்பட்டுள்ளது..

ஐக்கிய தேசியக் கட்சித் தரப்பினரால் முறைகேடுகள் மேற்கொள்ளப்பட்டதாக தயாசிறி ஜயசேகரவினால் கூற முடியுமானால், நாங்கள் ஏன் அவருக்கு எதிராக சில வழக்குகளை தாக்கல் செய்ய முடியாது.

தற்போதைய நிலையில், அவரது தனிப்பட்ட பணிகளை மேற்கொண்டால் மிகுதியை நீதிமன்றத்தில் நாங்கள் பார்த்துக் கொள்ள முடியும் என்று ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

# ஒரேநாளில் எழுவரை பதம்பார்த்த நாய்கள்

(யாழ்ப்பாணம்)

ஒரே நாளில் நாய்க்கடிக்கு இலக்கான ஏழுபேர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக ஒரே நேரத்தில் இந்நாய்க்கடி சம்பவங்கள் இடம்பெற்று தொடர்ச்சியாக இவர்கள் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வின்சன் செபஸ்தியன், (வயது-72) என்.சுப்பிரமணியம் (வயது 58), ஜே.தர்சிகா (வயது-3), பி. பரமேஸ்வரன் (வயது-69), சபேயர் கபீர் (வயது-40) சிவகுமாரன் லோரன்ஸ் (வயது-26) செல்வநாயகம் பேர்நாட் (வயது-23) ஆகியோரே இவ்வாறு நாய்க் கடிக்கு இலக்காகி யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் மூவர் ஒரே நாயின் கடிக்கு இலக்கானமை இங்கு குறிப்பிடத்தக்கது. தற்போது யாழ். குடாநாட்டில் நாய்கடிக்கு இலக்காவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ,25)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூலை 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.